
# அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை


| | | |
|---|---|---|
| மலர் : 13 | பிலவ௵ தைமீ | வருட |
| இதழ் : 11 | பிப்ரவரி—மார்ச் '62 | சந்தா ரூ. 3-00 |

திருமுருகன் பூண்டிக்கு அருகில் சுந்தரரிடம் வழிப்பறி

(சித்திர விளக்கம் பக்கம் 485)

## உள்பொருள்


பக்கம்

1. கீதையும் திருப்புகழும் (திருப்புகழ்மணி) ... 481
2. பாண்டி நாடும் சேர நாடும் சென்று வருதல் (கி. வா. ஜ.) ... 485
3. குமாரஸ்தவ விளக்கம் (திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A.,B.T.) ... 489
4. 'அந்தோமனமே' திருப்புகழ் விரிவுரை (குகஸ்ரீ). 494
5. ஒருமைப்பட்ட உள்ளம் (ஆ. கி. ரங்கராஜன்) ... 503
6. குறிக்கோள் (கி. வா. ஜகந்நாதன்) ... 508
7. ஸ்ரீ மகாபாரதம் (பாரத்வாஜி அதம்பார் S. ராமஸ்வாமி) ... 514
8. சோதனைச் சுழல் (ரஸபதி) ... 520
9. PLANETARY DISPLACEMENTS (*Thiruppugal Mani*) ... 527


---

### அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரைமீ முதல் பங்குனிமீ முடிய வருடச் சந்தா உள் நாட்டிற்கு ரூ. 3. பணம் முன்னதாக அனுப்பவும். வி. பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருடச் சந்தா வி. பி. தபால் செலவு உள்பட ரூ. 14.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா முப்பது ஷில்லிங்குகள், போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினால் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச் செலுத்தினால், சித்திரைமீ முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடியதை உத்தேசித்து, சந்தாத் தொகையைப் பெற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ நேரும்.

அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை.

---

குறிப்பு : முந்திய இதழ்களின் வருடத் தொகுப்புகள் 3-50 வீதம் கிடைக்கும். சில பிரதிகளே கைவசம் உள. தபால் செலவு ரூ. 1.

அமிர்தவசனி
தெய்வீக மாதப்பத்திரிகை
எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே.
ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

| மலர் 13 | பிலவஹூ மாசிமீ பிப்ரவரி—மார்ச்சு 1962 | இதழ் 11 |
| --- | --- | --- |

## கீதையும் திருப்புகழும்

(திருப்புகழ் மணி)

உலகத்தில் கர்மம், பக்தி, ஞானம் என்ற மூன்று வழிகளை வகுத்தனர் பெரியோர். மூன்றும் ஒன்றை விட்டு ஒன்று பிரியாது. கர்மத்தைச் செய்யாமல் உலகத்தில் உயிர் வாழ முடியாது. ஆதலால், ஒவ்வொரு ஜீவராசிகளும், அறிந்தோ அறியாமலோ எப்பொழுதும் ஏதாவதொரு செயலைச் செய்து கொண்டேயிருக்கின்றன. ஆனல், கர்மத்தைச் செய்யாமல் செய்ய வேண்டும். தூங்காமல்தூங்கவேண்டும். சாகாமல் சாகவேண்டும்; உலகத்தில் இல்லாமல் இருக்க வேண்டும் என்பர் ஞானிகள். எப்படி?

எந்தக் காரியத்தைச் செய்தாலும் மனம் மட்டும் அதில் ஒட்டக் கூடாது. பகவானுடனிருக்கவேண்டும். அதுவே செய்யாமல் செய்யும் கருமம். மனதை

வருவாய் பெருக வழியுளதோ? என்னில்,
திருவுறும்; நற்செயல்கள் செய்துபார் என்பாரே.

ஆண்டவனிடம் கொடுத்து உலக விஷயங்களில் உணர்ச்சி யில்லாம லிருப்பதே தூங்காத தூக்கம். உயிருடனிருக்கும் பொழுதே நானென்ற ஆணவம் அழிவதுதான் சாகாத சாவு. உலக விஷயங்களில் மனம் ஒட்டாமல், வெளிப்பார்வைக்கும் சாதாரண மனிதரைப்போல் செயல்களைச் செய்து கொண்டிருப் பதே உலகத்தி லில்லாமல் இருத்தல்

நாம் புகுவதற்கு ஓரிடம் வேண்டுமே! அது நம்மை பத்திரமாக வைத்துக் காக்கத் தக்கதா யிருக்க வேண்டும். அது எந்த இடம? பகவானுடைய சரணாரவிந்தமே நாம் புகுந்து இருப்பதற்குரிய பத்திரமான புகலிடம். அந்தப் புகலிடத்தை அடையும் வழி பக்தி தான். பக்தியால்தான் பகவானுடைய சரணாரவிந்தத்தைப் பற்றமுடியும்.

"பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனு மாறெனைப் பெருவாழ்வின்
முக்தியே சேர்வதற் கருளவாயே"

என்று முருகனை வேண்டுகிறார் அருணகிரியார்.

திருப்புகழைப் பொருள் தெரிந்து பாடிக் கொண்டிருந்தால் போதும். மற்ற புத்தகங்களை படிக்க வேண்டாம். அதேபோல், கீதையைப் படித்தால் போதும். 'திருப்புகழ்,' 'பகவத்கீதை' இவ்விரண்டில் எதுவும் பகவானை யடையும் வழி எது என்று தெரிவித்துவிடும். கீதையினுடைய சாரம முழுவதும் கீழ்க் காணும் ஒரு சுலோகத்திலேயே காணலாம்.

"மத்கர்மக்ருன் மத்பரமோ மத்பக்தஃ ஸங்கவர்ஜிதஃ
நிர்வைரஃ ஸர்வ பூதேஷு யஃ ஸ மாமேதி பாண்டவ"

இதன் பொருள் என்னவென்று பார்ப்போம்.

---

வீடு நமக்கு விளையவழி, நல்விரதம்
கூடுதலே என்று குறிப்புணர்த்து கின்றுரே

எந்த மனிதன், ஆண்டவன் பணித்தான்; அவன் பணி இது என்று, தனக்கேற்பட்ட காரியத்தைச் செய்கிறானோ அந்த மனிதனுக்கு, அந்த காரியங்களினாலேற்படும் நன்மை தீமைகள் இல்லை. எந்தக் காரியத்தையும் ஒருவன் தானாகச்செய்வதில்லை. அதைச் செய்விப்பவன் ஆண்டவன்.

" ஆராயும் வேளையில் பிரம்மாதி யானாலும்
ஐய ஒருசெயலுமில்லை." என்றார் தாயுமானவர்.

பித்தானை (Suitch) யழுத்துகிறோம். மின்சார விளக்கெரிகிறது. நாமா அந்த விளக்கை எரியச் செய்தோம். ஆண்டவனுடைய சக்தியே அதை எரியச் செய்கிறது. விளக்கில் எண்ணெய் திரி எல்லாம் போட்டுத் தயாரா யிருக்கிறது. நெருப்புக் குச்சியைக் கிழித்து திரியில் வைத்தவுடன் சுடர்விட்டு ஒளி வீசு கிறது. அச்சுடரை நம்மால் உண்டாக்க முடியுமா? நாம் கருவியாக மட்டும் இருக்கிறோமே யன்றிச் செயல்கள் யாவும் ஆண்டவனுடையதே. ஒரு பெரிய மஹா சக்தியின் காரியத்தை நாம் செய்ததாக நினைப்பது அறியாமை யல்லவா? எல்லாச் செயலும் அவன் செயல்.

" அவனன்றி ஓரணுவும் அசையாது "

பரமசிவனாகிய ஜோதியே சக்தியைத் தன்னி டத்தில் வைத்துக் கொண்டிருக்கிறது. அந்த சக்தியே உலகத்தை நடத்துகிறது. ஆதலால், அவனிடம் அன்பு வைத்து அவன காரியத்தைச் செய்கிறேன். அவன் கொடுத்ததை அனுபவிக்கிறேன். அவன் செய்யச் சொல்வதைச் செய்கிறேனென்று, தனக் கென்று ஒரு சங்கல்பமுமில்லாமல் ப்ரம்ம சங்கல்

---

வரமான கல்வி வளரவழி யேதென்னில்,
குரு இடத்தில், பக்தியது கொண்டுணர்க என்பாரே

பத்தில் தன்னைக் கரைத்து நிம்மதியா யிருப்பார்கள். பக்தர்களை விட்டு பகவான் ஒருகணநேரம்கூடப் பிரிவ தில்லை.

நாம் செய்யும் செயல்களை யெல்லாம் ஆண்டவன் ஆணைப்படி அவன் தூண்டுதலால் செய்கிறோம் என்ற பாவனை இருந்தால், முக்தி வழியின் முதல்படி யேறி யாய்விட்டதென்றே கொள்ளலாம்.

சாதாரண மனிதனொருவனுக்கே தன் காரியத் தைச் செய்பவனிடம் அன்பு மிகுதியாயிருக்க, கருணையே வடிவான பகவானுக்குத் தன்வேலையைச் செய்பவரிடம் கருணை அளவற்றதா யிருக்கும் என் பதற்கு ஐயமுண்டோ?

எல்லா ஜீவராசிகளுக்குள்ளும் மறைந்திருந்து அவர்களைச் செயலில் ஊக்குபவன் யாவற்றினும் மேலான 'பரம்' என்ற எண்ணம் இருக்கவேண்டும்.

'பரம்' என்பது என்ன? (தொடரும்)

---

வாழ்ச்சிக்கு என்றும் வழியே தெனவினவில்,
சூழ்ச்சியிலா நன்மனந்தான், என்றறவோர் சொல்வாரே.

சுந்தரர் வரலாறு :

## பாண்டிநாடும் சேரநாடும் சென்று வருதல்

(கி. வா. ஜ.)

சேரமான் பெருமாள் நாயனுர் திருவாலவாயைத் தரிசிக்க வேண்டும் என்ற தம் விருப்பத்தைத் தெரிவிக்கச் சுந்தரர் அவருடன் புறப்பட்டார். சோழநாட்டுத் திருப்பதிகள் சில வற்றைத் தரிசித்துக் கொண்டு அவ்விருவரும் மதுரையை அடைந்தார்கள். அவர்கள் வரவை அறிந்த பாண்டிய மன்னன் தககவகையில் பெருஞ் சிறப்புடன் வரவேற்ருன். பாண்டியன் பெண்ணை மணந்துகொண்ட சோழ மன்னனும் அப்போது அங்கே வந்திருந்தான். ஆகவே முடிபுனை வேந்தர் மூவரும் ஒன்று கூடினார், சுந்தரரை வணங்கினர். யாவரும் மதுரைத் திருக்கோயில் சென்று இறைவனை வணங்கினர். சுந்தரமூர்த்தியார் திருப்பதிகங்களைப் பாடியருளினுர்.

பிறகு தோழர்கள் இருவரும் பாண்டிநாட்டுத் திருப்பதிகள் பலவற்றுககும் சென்று வழிபட்டுத் திருச்சுழியலை அடைந்தார் கள். அங்கே இறைவனைப் பணிந்து இரவு தங்கியபொழுது சுந்தரமூர்த்தி நாயனுர் கனவில் இறைவன் ஒரு புதிய திருக் கோலத்துடன் எழுந்தருளிக் காட்சி அளித்தான். காளைப் பருவமுடைய திருமேனியுடன் தலையில் கொண்டையும் கையில் பொன்னுலாகிய செண்டாயுதமும் உடைய கோலத் தைக் காட்டினுன.

"நாம் இருப்பது திருக்கானப்பேர்" என்று அருளி உடனே மறைந்து விட்டான. அருகிலுள்ள கானப் பேரில் உள்ள பெருமானுக்குக் காளைப் பெருமான என்பது திருநாமம்.

---

முயற்சிசெய்து பாராமல், பினவாங்கும் மூகர்
அயற்சி அடைவர் ; அவர்வாழ்வு அவ்வளவே.

அதனால் அத்தலத்துக்குக் காளையார் கோயில் என்ற பெயர் வழங்கும். அத்தலத்துக்குத் தம்மை இறைவன் அழைத்த குறிப்பு அக்கனவு என்பதை உணர்ந்த சுந்தரர் சேர மன்ன ருடன் அத்தலம் சென்று, இறைவனை வணங்கிப் பதிகம் பாடிச் சில நாட்கள் அங்கே தங்கியிருந்தார்.

பிறகு வேறு சில தலங்களைப் பணிந்து திருவாரூர் வந் தடைந்தனர் இருவரும். பரவையார் செய்த உபசாரத்தாலும் அளித்த விருந்தினாலும் மனம் மகிழ்ந்து இரண்டு நபர்களும் சில நாள் அங்கே தங்கி அளவளாவினார்கள். ஒருநாள் சேரமான பெருமாள் நாயனாரும் சுந்தரமூர்த்தியாரை வணங்கி, "தேவரீர் மலைநாட்டுக்கு எழுந்தருள வேண்டும்" என்று விண்ணப்பித்துக் கொண்டார். அவர் விருப்பத்தை நிறை வேற்றத் துணிந்த சுந்தரர் அவருடன் புறப்பட்டார்.

திருவாரூரினின்றும் புறப்பட்ட அவர்கள் திருக்கண்டியூர் என்னும் தலத்தை அடைந்து வழிபட்டார்கள். அது அட்ட வீரட்டங்களில் ஒன்று. அதற்கு எதிரே வடகரையில் திருவை யாறு உள்ளது. திருக்கண்டியூரில் நின்று பார்த்தபோது திருவையாறு அக்கரையில் தோன்றியது. சேரமன்னர் அத் தலத்திற்குச் செல்லவேண்டும் என்ற தம் விருப்பத்தைத் தெரி வித்தார். அப்போது காவிரியில் பெருவெள்ளம் சென்று கொண்டிருந்தது. ஓடங்கூடச் செல்லமுடியாத வகையில் வேகமாகப் பெருக்கெடுத்தோடியது.

சுந்தரர் காவிரிக் கரையை அணுகி ஒரு திருப்பதிகத்தைப் பாடினார். உடனே மேற்கிருந்து வரும்நீர் பளிங்கினால் அணை போட்டதுபோல நின்றுவிட, இடையிலே மணல் தோன்றி ஒரு வழி உண்டாயிற்று. இறைவனைப் பணிந்தபடியே இரண்டு திருத்தொண்டரும் அதன் வழியே சென்று திருவையாறு

துன்பத்திற் கஞ்சித் தொலைதூரம் போவார்க்கு,
இன்பமே எந்நாளும் இல்லை ; இது திண்ணமரோ,

புகுந்து, இறைவனைத் தரிசித்து வழிபட்டனர். பிறகு மீட்டும் பழையபடியே இடையில் வழிவிட்ட ஆற்றின் நடுவே நடந்து வந்து தென்கரையை அடைந்தார்கள். அடைந்தவுடன் பழையபடி காவிரிநீர் ஓடத் தொடங்கியது. இந்த அதிசயத் தைக் கண்டு சேரமானும் பிறரும் சுந்தரர் பெருமையை நினைந்து பாராட்டி வணங்கினார்கள்.

அப்பால் சேரமான் பெருமான் சுந்தரரை சேரநாட்டுக்கு அழைத்துச சென்றார். திருவஞ்சைக் களத்தில் சுந்தரரை மிகச் சிறப்பாக வரவேற்று உபசரித்தார். தம்முடைய அரண் மனைக்கு அழைத்துச் சென்று அவர் திருவடிக்குப பூசை செய்து உபசரித்து விருந்து செய்தார். அங்கே எழுந்தருளி இருக்கும் சிவபிரானைத் தரிசித்துச் சுந்தரர் திருப்பதிகம் பாடினார்.

சேரமனனரும் அளவளாவிச் சிலநாட்கள் சுந்தரர் திரு வஞ்சைக் களததில் தங்கினார். அவருக்குத் திருவாரூர்ப் பெரு மானைப் பிரிந்திருக்கப் பொறுக்கவில்லை. அப்பெருமானைத் தரிசிககவேண்டும் என்ற ஆராமை மிகுதி யாயிற்று. ஆகவே, சேரமன்னரிடம் விடைபெற்றார். சுந்தரருடைய பிரிவைப் பொறுமல சேரமான பெருமான வருந்தினார். "எம்பெருமான் திருவருள நலத்தால் இஙகே இருந்து இனிதாக அரசாட்சி செய்து கொணடிரும்" என்று சுந்தரர் ஆறுதல் கூறினார். அப்பெருமானுக்குத் திருவாரூருக்குப போக வேண்டும் என்று இருககும் பேரார்வததை உணர்ந்த சேரர் அவரை வணங்கி வழியனுப்பலானார். பலவகையான பண்டங்களையும் பொன் னையும் அளித்து விடை கொடுத்தார்.

சேரமானிடம் பெற்ற பொருள்களுடன் சுந்தரர் திருவாரூரை நோக்கிப புறப்பட்டவர் கொஙகு நாட்டின்

---

சிற்றின்பத் தென்றும் சிதைந்து தவிப்பவர்கள்,
முற்றும் துயருழந்து மோசம்போம் போக்கினரே.

வழியே வந்தார். திருமுருகன் பூண்டிக்கருகில் அவர் வந்து கொண்டிருந்தார். சுந்தரர் இதுவரைக்கும் பெற்றன எல்லாம் சிவபெருமான் அளித்தவை. அவர் வேறு யாரிடமிருந்தும் ஏதும் பெறவில்லை. இப்போது சேரமான் வழங்கிய பொருள்களோடு வந்தார். 'இந்தப் பொருள்களைப பறித்து நம் கையாலே தருவோம்' என்று இறைவன எண்ணினான் போலும்! சிவகணங்களை அழைத்து, "நீங்கள் வேடுவர்களாகச் சென்று நம்பியாரூரனை கொண்டு செல்லும் பொருள்களைப் பறித்து வாருங்கள" என்று ஏவினான்.

அப்படியே அவர்கள் வேடுவர்களைப்போல உரு வெடுத்துச் சுந்தரரை வழிமறித்து, "எலலாப் பொருளகளையும் இப்படியே வையும்; இல்லையானால் கொன்று விடுவோம்" என்று அச்சுறுத்தி அவற்றைப பறித்துக் கொண்டு ஓடினர். பொருளைப பறிகொடுத்த சுந்தரர் அருகில் ஆலயம் தெரி வதைக் கண்டு அஙகே சென்றார். "சுவாமி, வேடுவர்கள் கொள்ளையிடும் இநத இடததில் ஏன இருந்தீர்?" என்று வருந்தி, "கொடுகு வெஞ்சிலை" என்ற திருப்பதிகம் பாடினார். அப்போது இறைவன் அருளால கோயில் முற்றத்தில சுந்தரர் இழநத பொருள்கள் யாவும் குவியலாக வந்து கிடந்தன. 'இறைவன் திருவருளால நிகழநதது இது' எனபதை உணர்ந்த நம்பி ஆரூரர் மீட்டும் இறைவனை வணஙகி அபபொருள்களை எடுத்துக்கொணடார். உடன் வநத ஏவலர்களிடம் அவற்றை அளித்து முன்போகச் செயது, மிக்க காதலுடன் திருவாரூர் சென்று அடைந்தார்.

---

குடிமக்கள் இன்பமுறக் கோல் செலுத்தும் மன்னன்,
முடியா எதையுமே முன்னிருந்து செய்வானே!

# குமாரஸ்தவ விளக்கம்

(திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம்பிள்ளை, B.A., B.L.)

## 9. நரபதி பதயே நமோநம:

நரபதி - அரசனுன; பதயே - தலைவனுக்கு; நமோநம: போற்றி போற்றி.

**நரபதி :**

நரபதி - அரசன். ஈண்டு நமது குமாரபிரானை அரசன் என்கிறுர் பாம்பன் அடிகளார். அரசனுவானுக்கு உரிய இலக்கணங்களனைத்தும் இப்பெருமானுக்கும் உண்டு.

**தசாங்கம் :**

ஒரு அரசர்க்கு அவசியமாக அமைய வேண்டுவன மலை, ஆறு, நாடு, நகர், குதிரை, யானை, மாலை, கொடி, முரசு, ஆணை என்பன. இவற்றைத் தசாங்கம் என்பர். இவை நமது வேல் வேந்தனுக்கும் உணடு என்பது,

" ................ ..பருவதது
அகலாத பேரனபு அடைநதோ ரகத்துள்
புகலாகும் இன்பப் பொருப்பும்—சுகலளிதப்
பேரின்ப வெள்ளப் பெருக்காறும் மீதானம்
தேரினப நல்கும் திருநாடும்—பாரின்பம்
எல்லாங கடந்த இருநிலததுள் போக்குவரவு
இல்லா துயர்ந்த அணிநகரும்—தொலலுலகில்
ஈறுமுதலும் அகனறு எங்கும் நிறைந்து ஐந்தெழுத்தைக்
கூறி நடாத்தும் குரகதமும்—ஏறுமதம்
தோய்ந்து களித்தோர் துதிக்கையினல் பஞ்சமலம்

---

தலைவன் குறிப்பறியா ளாயின, தலைவி
அலைமோதும் வாழககை அநுபவிக்க வநதவளே !

காய்ந்த சிவஞானக் கடாக்களிறும்—வாய்ந்தசிவ
பூரணத்துள் பூர்ண்மாம் போதம் புதுமலரா
காரகத்துள் கட்டும் நறுந்தொடையும்—காரணத்துள்
ஐந்தொழிலு மோவாது அளித்துயர்த்த வான்கொடியும்
வந்த நவநாத மணிமுரசும்—சந்ததமும்
நீக்கமின்றி ஆடி நிழலசைப்பான் போல்புவனம்
ஆக்கி அளித்தருளும் ஆணையும்—தேக்குமழ்ந்து
வீசும் பனுவல விபுதர் தனித்தனியே
பேசும் தசாங்கமெனப் பெறறேனே.

[பொருப்பு - மலை ; குரகதம் - குதிரை ; கடாக்களிறு
மதமிக்க யானை, நறுந்தொடை—வாசனைமிக்க மாலை.]

குமரகுருபர அடிகளார் திருவாககாலறிக.

(2) சீரிய அரியணையில யானை அகடென விளங்கும் குடை நிழலில, அனனம்போனற வெண்கவரிகள் வீச, பனிநீர் தெளிக்கப்பெற்று அளவறு கலவியின முழுகிய குறமகள் அமர்ந்து ஒயிலாய் நிமிர்ந்து திருநத முருகோன இருநத கொலுச் சிறபபை அருணகிரியார் அருளிய 'கொலு வகுப்பு' பேசுகிறது. விரிவஞ்சி விடபபடடது.

(3) மேலும் நம் குகவேள் அரச பரம்பரையில் வந்தவர். இவரது தந்தையான சிவபிரானுர் அரசர் எனற பெயரால் அழைககபபடுகிருர். இவ்வுண்மையை,

"மாயோன மேய காடுறை உலகமும்
சேயோன மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல உலகமும்
வருணன் மேய பெருமணல உலகமும்"

(தொல்காப்பியம்)

---

தாமரை பொனமுத்து சாமரைகோ ரோசனைபால்
தேம்புனுகு பட்டுகனல் சவ்வாதும் தக்கனவே.

என்ற இடத்தில் தீம்புனல் உலகக் கடவுளாக வேந்தன் (அரசன்) என்ற சொல்லால் சிவபிரானைக் குறித்துள்ளமை காணலாம். சிவனார் சோமசுந்தர பாண்டியனாக இருந்து அரசு செய்தமை,

" சடைமறைத்துக் கதிர்மகுடந் தரித்துநறுங்
கொன்றையந்தார் தணந்து வேப்பந்
தொடைமுடித்து விடநாகக் கலனகற்றி
மாணிக்கச் சுடர்ப்பூ ணேந்தி
விடைநிறுத்திக் கயலெடுத்து வழுதிமரு மகனாகி
மீன நோக்கின்
மடவரலை மணந்துலக முழுதாண்ட சுந்தரனை
வணக்கம் செய்வாம்

[வழுதி மருமகன் - பாண்டியரது மருமகன்; மீன நோக்கின மடவரல் - மீனாட்சியம்மை]

என்ற திருவிளையாடல் புராணத்தா லறியக் கிடக்கிறது.

(4) முருக வேளின் தாயாக உமையும், இமவான் மகளாகப் பார்வதிதேவியாயும், மலயத்துவசன் மகளான மீனாட்சியாகவும் அவதரித்ததோடு, பாண்டி நாட்டரசியாகி அந்நாட்டிற்கே கன்னிநாடு எனப் பெயர் வழங்கச் செய்ததும் குறிக்கத்தக்கவை.

" செழியர் பிரான் திருமகளாய்க் கலைபயின்று
முடிபுனைந்து செங்கோ லோச்சி
முழுதுலகும் செயங்கொண்டு திரைகொண்டு
நந்திகணம் முனைபபோர் சாய்த்துத்
தொழுகணவர்க்கு அணிமணமா லிகைசூட்டித்
தன்மகுடஞ் சூட்டிச் செல்வந்
தழைவுறுதன் அரசளித்த பெண்ணரசி
அடிக்கமலந் தலைமேல் வைப்பாம் "

---

சங்கேதம் கொள்ளாமல் சாற்றும் பதினென்றும்,
எங்கே பிறந்தாலும் இவ்வுலகர் ஏற்பாரே.

[செழியர் பிரான் - மலயத்துவச பாண்டிய மன்னன்
பெண்ணரசி - மீனாட்சி அம்மை].

என்ற பரஞ்சோதியார் திருவாக்கினால் தேவியாரும் பெண்ணரசி யாகிறார். திருவாசகக்காரர் சிவனாரை,

" அங்கண் அரசை அடியோங்கட்கு ஆரமுதை
" பேர் அரையர்க்கு இங்ஙனே பித்து ஒருவ ராமாறும

என்ற திருவெம்பாவைப் பாசுரங்களில் அரசர் எனக் குறித்தலாலும், அவருக்குத் தேவியார் அரசியாதலும், இவர்களது திருமகனார் " வேல வேந்தராதலும் விளங்குகிறது.

(5) தண்டமிழ்ச சுவையைத தாம் மட்டும் உணணுவது தகாதென எண்ணினார் சங்கரர். அவர் தமது தேவியைப மலயத்துவச பாண்டியன மகள் தடாதகைப பிராட்டியாகச் செல்லுமாறும், தாமே சௌந்திர பாண்டியராகவும், குமரவேளை உக்கிரப பெருவழுதி (உககிரகுமார பாண்டியர்) ஆகவும் செய்தார்.

" தமரநீர்ப் புவனம் முழுதொருங கீன்றாள்
தடாதகைத் தேவிஎன் றொருபேர்
தரிக்கவுந் ததுவும், தனிமுதல் ஒருநீ
சவுந்திர மாறனா னதுவும்
குமரவேள் வழுதி உக்கிர னெனப்பேர்
கொண்டதும், தண்டமிழ் மதுரம்
கூட்டுண எழுந்த வேட்கையால் எனில்இக்
கொழிதமிழ்ப் பெருமையார் அறிவார் ? "

(குமரகுருபரர்)

அதனால் செவ்வேளே உக்கிர குமார பாண்டியனாக அரசு செய்தனர். அவர் நரபதியேயாம் எனக.

---

சிங்கக் குகைநுழைந்து, முத்துதந்தம் சேர்பபதுபோல்,
புங்கவருள சேர்ந்தால், புகழுயர்வு பொங்குமே.

(6) நமது சந்தக் கவிஞர் அருணகிரியாரும்

" சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச்
செஞ்சுடர்வேல் வேந்தனை " (கந்தரலங்காரம்)

"வேந்தா கடம்புபுனை சேந்தா! சரண்சரண்" (திருப்புகழ்)

" ஆறு அமுதே அயில்வே லரசே " (கந்தரனுபூதி)

" கிரிராச குமாரிமகன் " ( ,, )

என்று எங்கள் பாம்பன் தாசரும்

" வலியார் அயிலரசே "

" வேலைப்பிடித்த செங்கை வேந்தை அழைக்கவுந்தன்
காலைப் பிடித்தேன் என காதலால் பொன்மயிலே "

என்றும், குறித்துள்ளமை உன்னுக.

மேல் கூறியவற்றிலிருந்து முருகநாதன் அரசர்க்குரிய தசாங்கமுடையவ னனதாலும், சிவனர், தேவி அனைவரும் அரசரானதாலும், கந்தன் அவர்களது திருககுமாரனனதாலும், உக்கிரப் பெருவழுதியா யிருந்தரசு செய்தமையாலும் நரபதி என்னலாம். அவ்வித நரபதியான தலைவனுக்கு வணக்கம் செலுத்தி, ' நரபதி பதயே நமோநம ' என்று நமது பாம்புனடிகள் பாடு மருமை பாராட்டற்குரியது.

---

அறிஞர் பகைத்தாலும் தப்பில்லை, நட்பாம்;
அறிவிலார் தம்பகையால், ஆபத்தாம் என்றும்மே.

## திரிசிராப்பள்ளி
## திருப்புகழ் விரிவுரை
[குகஸ்ரீ]

அந்தோமன மேநம தாக்கையை
தம்பாதெயி தாகித சூத்திரம்
அம்போருக னுடிய பூட்டிது ! — இனிமேல்நாம்
அஞ்சாதமை யாகிரி யாக்கையை
பஞ்சாடிய வேல்வ னுர்க்கியல்
அங்காருவம் வாயினி தாக்கையை — ஒழியாமல்
வந்தோமிது வேகதி யாட்சியும்
இந்தாமயில் வாகனர் சீட்டிது !
வந்தாளுவம் நாமென வீக்கிய — சிவநீறும்
வந்தேவெகு வாநமை யாட்கொளு
வந்தார்மத மேதினி மேற்கொள
மைந்தாகும ராவெனு மார்ப்புய — மறவாதே
திந்தோதிமி தீதத மாத்துடி
தந்தாதன னுதன தாத்தன
செம்பூரிகை பேரிகை யார்த்தெழ — மறையோதச்
செங்காடென வேவரு சூர்க்கரை
சங்காரசி காமணி மேற்கொடு
சேண்டாடிம காமயில் மேற்கொளு — முருகோனே
இந்தோடிதழ் நாகம காக்கடல்
கங்காளமி னுர்சடை சூட்டிய
என்தாதைச தாசிவ கோத்திர — னருள்பாலா
எண்கூடரு ளால்நெளவி நோக்கியை
நன்பூமண மேவிசி ராப்பளி
யென்பார்மன மேதினி நோக்கிய — பெருமானே.

---

மதுரமொழி யாயின, உலகம் மகிழும் ;
அதிருஞ்சொல ஆயின், அருவறுப்பர் நல்லோரே,

(பிதவிரா) (அந்தோ......பூட்டு இது.)

அந்தோ மனமே—ஐயோ மனமே !;

நமது ஆக்கையை நம்பாதே - (இனியும் பலநாள இருப்புழு என்று) நாம் இருந்த உடலை நம்பி ஏமாந்து போகாதே ;

இத அகித சூத்திரம் இது - இன்பத்திற்கும் துன்பத்திற்கும் இடமான இநத யந்திரம்,

அம்போருகன் நாடிய பூட்டு - (சுவாதிஷ்டான) கமல நான்முகன், (பொல்லா விணைகளை) ஆய்ந்த, (அதற்குத் தக்க படி, உறுப்பு உறுப்பாகப் பூட்டி வைத்த) பூட்டு எனப்பெறும் ;

(இனிமேல்.........வா)

இனிமேல் நாம் அஞ்சாது அமையா—அஞ்சாமல் இனியும் நாம் அமைதியா யிருக்க முடியாதே ;

கிரி யாக்கையை பஞ்சு ஆடிய - (கிரவுஞ்ச) மலையின் கட்டுக் கோப்பான வடிவைப் பஞ்சுபோல் பறக்கடித்த;

வேலவனார்க்கு இயல் ஆகுவம் - (அருள்) ஞான சக்தி தரர்க்கு அனபுடையம் ஆவேம் ;

அங்கு இனிது வா - அந்த சந்நிதிக்கு (வணங்கும்) இன்ப மாக வா !;

(ஆக்கையை ஒழியாமல்,.........மேற்கொள.)

ஆககையை ஒழியாமல் வந்தோம் - உடல் முயல்வை விரையும் செய்யாமல், (விளக்கம் பெற) வந்தோம் !,

இதுவே கதி ஆட்சியும் - (நம்பர் நம்மை) ஆட்கொள்ளும் நலஞ் சிறந்த பேறு இது தான் (என்று நம்பு) !

மயில் வாகனர் சீட்டு இது - (ஓங்கார) மயில்ஊரும் பெருமானார், (எழுதி உதவிய) அறிக்கை இதுதான்

---

வழுவில் குயில்குரலை வாயார வாழ்த்தி,
கழுதைதனைத் தூற்றும் கணக்கதனைக் கண்டாமே.

நாம் வந்து ஆளுவம் என வீக்கிய சிவ நீறும் இந்தா - நாம் (வலிய) வந்து ஆடகொள்வம் என்பதற்கு அடையாளமாக, (திரிபுண்டரமாகத்) தீட்டிய சிவ விபூதியாம் இதையும் தரித்துக் கொள் !

(வந்தே.........மேற்கொள)

வந்தே வெகுவாய் நமை ஆட்கொள் உவந்தார் - (தடத்த உருவில்) எழுந்தருளி, நம்மை ஏன்று கொள, (எம்பெருமான்) மகிழ்ந்து இங்கே இருக்கின்றார் ;

மதம் ஏது இனி மேற்கொள - இதன் மேலும் ஏற்க, சமய வழிபாடு வேறு யாதுளது ?;

(திந்தோ.........மறைஓத)

திந்தோ திமி தீதத - (எனும் ஒலியுடன்),
மா துடி - உயர்ந்த (பறையான) உடுக்கை ;
தந்தாதன றுதன தாத்தன - (எனும் ஒலியுடன),*
செம்பூரிகை - சிறந்த ஊதுகுழல் ;

பேரிகை ஆர்த்து எழ - முரச வாத்தியம் (முதலியவை கள் (விறுவிறுத்துப) பேரொலியை விளைவிக்க ;

மறை ஓத - (நான்) மறைகள (மந்திர) நாதம் காட்ட ;

(செங்கோடு.........முருகோனே !)

செங்காடு எனவே வரு மூர்க்கரை - சிவந்த காடுபோல் அடர்ந்து வந்த முரடர்களான அசுரர்களை ;

சங்கார சிகாமணி வேல்கொடு செண்டாடி - அழிக்கும் சிரோ ரத்தினமான ஞான சகதியால் நிலைகுலையச் செய்து ; (செண்டாடல் - நிலை குலையச் செய்தல்).

மகாமயில் மேல கொளும் முருகோனே - (சுத்த மாயை யான முதன்மை) மயில் ஏறுகிற முருக பிரானே !

---

பலகையான எண்ணுன்கு பல்துணையால், நாக்கு
வலகையாம் சுவையறியும் ; வாழும் குறிப்பிதுவே.

(இந்தோடு.........அருள் பாலா !)

இந்தோடு இதழ் நாகம் - பிறைத்திங்களுடன் கொன்றையையும், (குண்டலினிப்) பாம்பையும்,

மகாக் கடல் கங்காளம் - பெருங்கடல்போல் பெருகிய கங்கையையும், எலும்புக் குவியலேயும்,

மின் ஆர் சடை சூட்டிய - மின்னல்போல் ஒளி எழுப்பும் தனிப்பெரும் சடையில் தரித்துள,

என் தாதை சதாசிவ கோத்திரன் அருள் பாலா - எனது (பரம) பிதாவான சதாசிவ கோத்திரர் அருளிய இளம்பிள்ளேயே!

(எண்கூடு அருளால்.........பெருமாளே !)

எண் கூடு அருளால் - நினைவுப் பெருக்கம் கண்டு எழுந்த நிறையருளால்,

நீள்விழி நோககியை - மானபோலும் (மருள்கின்ற) கண்களை யுடைய வள்ளி யம்மையை,

நன் பூ மணம் மேவி - சிறந்த திருமணத்தை விரும்பிச் செய்து கொண்டு;

சிராப்பளி என்பார் - திரிசிராப்பள்ளி என்று (இடையறுது) உருவேற்றுபவர்களுடைய,

மன மேதினி நோக்கிய பெருமாளே - நெஞ்சமாகிய (நன்செய்) நிலத்தில் அருள் நோக்கம் பாலிக்கும் பெருமிதமான அத்தா !

(மைந்தா.........ஆர்ப்பு உய மறவாதே.)

மைநதா - (ஆக்கமான) வன்மை யுடைய ஐயா!

குமரா எனும் ஆர்ப்பு - பதினறு வயது தோற்றம் காட்டும் குமரா ! என்று கூவும் கிறைபே ரொலியை,

---

பகைவரிடம் மெய்யன்பு பாவித்தே, அன்னவரால் சுகமதுறும் நல்லோர், சுயபுத்தி யுள்ளவரே.

உய மறவாதே - (நீ) உய்வது கருதி, மறவாமல் ஓதிக் கொண்டே இரு. (எ - று).

விரிவுரை.

மனமே! கோள்களும் நாள்களும் கொக்கரித்தாலும், இடையூறு பிறர்க்கு; எமக்கு இல்லை என்று எண்ணச் செய்வை! பக்கத்து வீட்டவர் படுக்கை யாயினர்; எதிர்வீட்டு ஒருவர் இறந்து போயினர். இதைக் கண்டிருந்தும், இன்னும் பல கேட்டிருந்தும், என்றும் நாம் இருப்பம் என்று, இறுமாக்க வைத்தனை! பொல்லாத உன் போக்கைப் புரிந்து கொள்ள முடியவில்லையே!

அறுபது தத்துவங்கள், தனித்தனியே அமைந்தவை. அவைகளை ஒன்று கூட்டி, கட்டி வைத்த இத்தேகம் ஒரு கட்டடம். 'வெளுத்த நரம்பும், உளுத்த தோலும் இழுத்துக் கட்டிய கூடு' எனும் இவ்வுடல், ஒவ்வொரு தத்துவமாகப் பிரமன் பூட்டி வைத்த ஒரு பூட்டு. இது, பல இன்ப துன்ப அனுபவ யந்திரம். கட்டடம் ஒரு நாள் இடிந்து விடும். கூடு ஒரு நாள் குலைந்துவிடும். தெரிந்த யந்திரம் தேய்ந்துவிடும்.

'அந்தோ மனமே! நமது ஆக்கையை
நம்பாதே! இதாகித சூத்திரம்,
அம்போருகன் நாடிய பூட்டிது!'

தொண்டை விக்கிக் கொள்ளுமோ? கண் பஞ்சடைந்து போகுமோ? சண்ட மாருத வேகத்தில் பிராணன் சஞ்சாரம் செய்யுமோ? மூச்சுத் தடைப்பட்டு மோசம் விளையுமோ? எந்த நேரத்தில் ஏது நிகழுமோ? எண்ணும் போதே உடலாட, குடல்தான் புரண்டு குழம்புகின்றதே! அஞ்சாது இருக்கலாம் என்றால், ஆவதில்லையே;

---

காந்தன் இல்லாள் ஆயின், கவினிருந்தும் பாழ், அதுபோல்,
சாந்தம் இலார் செய்தவந்தான், வீணாகிச் சாயுமரோ.

ஆகிற காலத்தில் பார்த்துக் கொள்ளலாம்; இப்போது அவைகளை எண்ணாதே! பேசாதே! என்னில், ஆம். ஆம். ஜாதகப்படி, இன்னும் எனக்கு ஆயுள் உண்டு; தேகத்தில் திடம் உண்டு என்று தைரியம் கொள்ளலாம். எனினும், பல சமயம், டொண்! டொண் என்று வீதியில் எழுகிற சாப்பறை, உண்டு? உண்டு? என்று, பரிகசிப்பதுபோல் பயங்கரமாக ஒலிக்கிறதே!

'இனிமேல், நாம் அஞ்சாது அமையார!'

அகங்காரம், மலை உருவாகி, அமரர் முனிவரை அலறச் செய்தது. அம்மலையை நொறுங்க அடித்து, அன்பரைக் காத்தவன் ஞானவேல் அம்மான். பரந்த உலகில் பாசம் கொண்டு, பட்டபாடு போதும் போதும். பாழும் அஞ்ஞான பாசந்தான், அநியாயப் பல பிறப்பை அளித்தது. இனியேனும், சத்ஞான சத்திதரன் இடத்தில, பரம அன்பாம் பாசம் வைப்பம். சிரி யாக்கையைப் பஞ்சாடிய வேலவனுக்கு இயல் ஆகுவம்.'

'வாழ்த்த வாயும், நினைகக மடநெஞ்சும்,
தாழ்த்த சென்னியும் தந்த தலைவனை,
சூழ்த்த மாமலர் கொண்டு துதியாதே
வீழ்த்தவா வினையேன் நெடுங் காலமே!'

என்று திருமுறையில் எண்ணியபடி, வீணாக உடலின் முயற்சியை விரையம் செய்யோம்; செவ்வேள் பரமன சந்நிதியைச் சேவிப்போம், சீர்பெறுவோம் என்று,

'அங்கு இனிது வா! ஆக்கையை ஒழியாமல் வந்தோம்!

• இதுவரை, விதிவழி சென்ற மதி ஆட்சி; இறைவனை வழிபட்டு வந்த இந்த ஒன்று, பயன் விளைய நம்மை ஆளும் பதி ஆட்சி.

இதுவே கதி ஆட்சியும் என்று நம்பு!

---

அன்னையிலாப் பிள்ளை, பிழைப்ப(து) அருமைதான்;
தின்னுபல்கள் வீழ்ந்தபின்ர், தூயசுவை தோன்றுதே.

ஆவரண சக்தி, ஓங்கார கோலம், குடிலையின் சொரூபம் என்னும் மயில் ஏறும் பெருமான்மேல், அன்புகொள்! வாழ்விக்கும் எம் சந்நிதிக்கு வா! நற்பேறு இதையே நம்பு என்று, எம்மான் ஆகம உருவில் எழுதி வைததுள அறிக்கையான இதுதான், மயில் வாகனர் சீட்டு.

என்னைத் தேடிநீ ஏமாந்து போகாதே! ஆலயத்திற்கு வந்து, உன் அன்பைக் காணிக்கை யாக்குவையேல், வலிய யாமே வருவம்: காணுமாறு எம்மை உனக்குக் காட்டுவம். அருளொடு நின்று ஆட்கொள்வம் எனறு அருளி, அதற்கு அடையாளமாக, அப்பரமன் அழுந்தத் தரித்துள பேருன விபூதியை நீ பெற்றுக்கொள்!

"நின்று வாடும் இவள்தன் ஆசை இடர் தவிர்ப்பர் ஆதலால், நீறு கொண்டு மூன்று ரேகை நெற்றி மீதில் எழுதுமே!" எனும் ஆன்றோர் அறிவிப்பையும், நீ அறிந்துகொ! அதே செய்தியைத்தான ஆண்டவன்,

வந்தாளுவம் நாம் என விக்கிய சிவநீறு

என்று, குறிப்பாக நானும் கூறுகிறேன். இந்தப் புனித விபூதியை, நீயும் நன்குகப் பூசிக்கொள்!

நிததியம் இவ்வழிபாடு நிகழுமேல், காணொணாதது, பேசொணாதது, வெளியே ஒளியது, துரிய அதீதமானது என வுள சொருபப பெருமான், நம்பால கொண்ட நல்லருளால், தடத்த உருவில், காணுமாறு தனனைக் காட்டுவன். அரிய பலவகையில் நம்மை ஆட்கொள்வதன பொருட்டு, ஆநந்த மூர்த்தமாக சந்நிதியில அமர்ந்துளன். அந்த அருமையைத்தான்,

வந்தே வெகுவா நமை ஆட்கொள் உவந்தார்

எனறு, உணருமாறு உனக்கு உணர்த்துகிறேன.

---

வருத்தி வளைமூங்கில், மாமகுடம் ஆகும்;
வருந்திக கற்றால், பிறகு வாழலாம் உண்மையிதே.

இடத்திற்கும், காலத்திற்கும், ஊழிற்கும், இருக்கும் உணர்விற்கும் தக்கபடி, எததனையோ சமயங்கள் இருக்கின் றன. எனினும், எளிது பயனதரும் இதற்கு மேற்பட்ட சமயம், இந்த உலகில் இல்லை ; அதனுல்தான்,

இனி மேற்கொள மதம் ஏது ? என்கிறேன்.

இதுவரை இறைவர் அறக்கருணை.

கொதிக்கும் கண்ணர், கோபக்கனலர், வெடிக்கும் சொல்லர், அடர்ந்த காடுபோல் வந்து ஆரவாரிக்கும் அவுணர்கள், அமலரது அருளாக்கம் அறியார். அறிந்து வழிபடுவாரையும் அதிரச் செய்தனர். அதனுல், உத்தம பக் தர்கள் ஓலமிட்டு அலறினர்.

அதை யறிந்து, உடுக்கை, பூரிகை, பேரிகை முதலிய பறைகள் பயங்கர ஒலியைப் பரப்ப, வேதங்கள் மிருத்யு நாத விளைவு செய்ய, ஆக்ரமித்த அவுணர்களை அழிக்க நினைத்தீர் !

அகததில் ஆணவ கண்டனம் ; அநியாய வாதிகளைப் புறத்தில் அழித்தல் ; உத்தம உயிர்களில் ஒளியைப் பாய்ச்சி, தாபம் மிகுவிக்கும் இளைபபைத் தவிர்த்தல் முதலிய விமலமான சேவை செய்யும் வேல்,

சங்கார சிகாமணி என்னும் பெயர்பெறும்.

'கிரி யாக்கையைப் பஞ்சாடிய' அவ்வேலை ஏவி, சீரிய அவுணர்களைச செண்டாடினீர் ! (செண்டாடல் - லேசுபட அழிததல்.) இது உமது மறக்கருணை.

*மாமயில் மேல்கொளும் முருகோனே !

பிரணவம் ஐந்து. அவைகளுள் இரண்டாவது பிரணவம், சகத்ணரண காமராஜ மகா பீஜம். அதன பிரதிநிதியே மூன்றும் பிறை.

---

வளையாத மூங்கில், கூத்தாடிச சாயும்;
வளைந்து கல்லாதார், வாழ்நாளில் தாழ்வாரே.

மகாரந்தம் ஓம்; ஐந்து இதழ்களும் ஐந்தெழுத்து இதன் பெயர் கொன்றை.

பரிக்ரக சக்தியே பாம்பு, இதனுடன் அப்ராக்ருத கங்கை. இவைகளை மின்வண்ணச் சடையில் மிளிர வைத்தவர் எம் பரமபிதா.

அருவம் நான்கு; உருவம் நான்கு; அருவுரு ஒன்று. இந்த நவந்தரு பேதமாக நாடகம் ஆடும் அந்த நம்பர், நாத கோதரர், நாத ப்ரவரர் ஆதலின், சதாசிவ கோத்திரர் எனப் பெறுவர்.

இந்தோடு.................சதாசிவ கோத்திரர் அருள்பாலா

மான பெற்ற மகளார் வள்ளியம்மை; அதற்கு ஏற்ப, அவர் மருளும் கண்ணினர்; அதனால் அவர், நவ்வி நோக்கி எனும் பெயரினர். (நௌவி - மான.)

புறத்தில புனம் காத்தார். அகத்தில தவம் வளர்த்தார். குவிந்த அவர் மனததில் திருவருள் கூட்டுறவு செய்தது. இந் நிலையரை ஏற்பம் எனபதற்கு அறிகுறியாக, புறத்தவர் அறிய, அவரைத் திருமணம் புரிந்து கொணடீர்!

என் கூடு அருளால், நௌவி நோக்கியை
நன்பூ மணம் மேவி; பேஷ. எனன அருமை!

"அரிச்சி ராப்பகல், ஐவரால் ஆட்டுண்டு,
சுரிசசி ராது, நெஞ்சே! ஒனறு சொலலக் கேள்!
திரிச்சிராப் பள்ளி என்னலும், தீவினை
நரிச்சிராது, நடக்கும் நடக்குமே."

இப்படிப் பெயர் சொன்னதும், வினை பெயர்ந்து ஒழியும் என்று, அனுபவம் கூறினர் அபபர் பெருமான்.

---

இரந்தாரை இவ்வுலகர், ஏளனம்செய் வார்; தம்முன்
கரம்ஏந்து வாரென்று, காற்றும்மா றிப்போமே.

திரிசிராப்பள்ளி என்று, தினமும் ஓதுவார் உள்ளம் ஒரு பெருநிலம். அந்த நிலத்தை அருளோடு நோக்கி எழுந்தருளி, பெருமித ஆட்சிசெய் பெருந்தகையே! உம்மை,

திராப்பளி என்பார், மன மேதினி
நோக்கிய பெருமாளே!

என்று, முதனமைபெற அழைப்பதுதான் முறை.

மைந்தா! குமரா! மறைநாயகனே! முருகேசனே!
அருள் பாலா! பெருமாளே!

என்று, அறுமுகனை அனபோடு கூவி அழைத்துக் கொண்டே இரு! மறந்திடாதே! உய்யும் வழி இந்த ஒன்றுதான் உளது என்று, உருகா மனம் உருகி ஒத்துழைக்குமாறு, அந்த மனத்திற்கு, விநயம் காட்டி விண்ணப்பித்தபடி.

வாழ்க திருப்புகழ் வளம்!
ஓம்.

---

## ஒருமைப்பட்ட உள்ளம்

[ஆ. கி. ரங்கராஜன்]

உள்ளம் ஒருமைப்பட்டால் உலகில் எத்தனை பெரிய காரியமாய் இருந்தாலும் சாதித்து விடலாம். உள்ளம் ஒருமைப் படுவதற்கு பல்வேறு சிந்தனைகள் ஒழிய வேண்டும். ஆனால் அகில உலகில் பிறந்தவர்க்கு சிந்தனைகள் பல ஏற்படாமல் இருக்க முடியாது. வாழ்க்கைப் பாதையில் வெற்றிகரமாகச செலலவேண்டி ஒவவொருவர்க்கும் பல்வேறு சிந்தனைகள் ஏற்படத்தான் செய்யும். ஆயினும் அச் சிநதனைகளை ஒன்ருக்கி உறுதியான நிலைக்கு வருதலே உள்ளம் ஒருமையடைதல என்று பொருள்.

---

ஒருபோ(து) உணவுண்பார் யோகியரே! ஊன்றி
இருபோது ஏற்பவரைப் போகிகள் என்பாரே.

இது சற்று சிரமமானதே. இதைக் கருதியே தாயுமானவரும், 'சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறமரிது!' என்றார். அரிது எனறால் சிரமப்பட்டுச் செய்யவேண்டும் என்பதே பொருள். அன்றி முடியாததல்ல! அருள்ஜோதி வள்ளலாரும், 'ஒருமையுட னினதுதிரு மலரடி நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும்' என்று இறைவனைப் பணியும் போது பகதர்களைக் குறிப்பிடுகின்றார்.

உள்ளம் ஒருமைப்பட்டு விளங்கும் பக்தரினுள் இறைவன் களிநடம் புரிகின்றான். ஆசைகள் அற்ற உள்ளம் சலனமற்றுத் திகழும். அப்போது, அதிலே இறைவனின் பிம்பம் பிரகாசிக்கிறது. "பொய் வளரு நெஞ்சினர்கள் காணாத காட்சியே!" என்றார் தாயுமானார்; அபிராமபட்டர், "பொய்வந்த நெஞ்சில் புகவறியா மடப் பூங்குயிலே!" என்றார். உள்ளமாகிய தடாகத்திலே, பொய்யும், கபடமும், ஆசைகளுமாகிய பாசி முதலிய நீர்ப்பூண்டுகள் படர்ந்தால், அத்தடாகம் பயனற்றுப் போகிறது. அதிலே இறைவனின் தோற்றத்தைக் காணமுடியாது. அவற்றை அகற்றித தூய்மைப் படுத்துங்கால், இறைவனின் ஒளி பிரதிபலிக்கிறது.

பொய்யும் கபடமும் ஆசைகளும் கூடி யிருக்கும்போது உள்ளம் சிதைநது, சின்ன பின்னமாகக கிடக்கும். பக்தி எனும் கருவியும், உறுதி, தனனடக்கம் என்ற சாதனங்களும் கொண்டு, பொய், கபடம், ஆசைக ளாதியவற்றைக் களைந்து உள்ளத்தை ஒன்று படுத்தினால், இறைவனின் அருளொளி ஆஙகு ஜொலிக்கும்.

இறைவனை அனுதினமும் தியானித்தலும், பூஜித்தலும் உள்ளம் ஒருமைப படுவதற்கு உரிய சாதனங்களாகும்: இறைவன எங்கும், எவ்விடத்தும, எவரிடததும் விளஙகுபவன,

---

முபபோது ரோகிக்கு, முடிசாயநது போவார்ககு
எபபோதும் உண்டியென, ஏசுகினற(து) இவ்வுலகே.

இருப்பினும் நாம் அதனை உணராதவரை இறைவனை அடைய இயலாது. இறைவன் தன்னிடம் இருப்பதாக எவன் எப்போது உணருகிறானோ, அப்போதே அவன் உள்ளம் ஒருமைப் படுகிறது. அவ்வாறு ஒருமை அடையுங்கால் அவனது வினைகள் யாவும் அவனை விட்டகன்று, மீண்டும் அவை யாவும் நல்லவையாகி அவனை வந்தடைகின்றன.

பிறர் மீதுள்ள குற்றங்களை எண்ணாமல், அவர்பால் நல்ல மனப்பான்மை கொண்டோமாகில், அது உள்ளம் ஒருமைப் படுவதற் கொரு வழி. உள்ளம் ஒருமைப்படாமல் எந்த முறையில் பக்தி செய்தாலும் அது பக்தியாகாது. அது நடுப் பாலைவனத்தில் பிரயாசைப்பட்டுத் தெளித்த நீர்போல் வியர்த்த மாகும்.

இறைவனுக்கு அர்ப்பணிக்கும் பொருள் எதுவாயினும், நமது உள்ளத்திற்கு இசைந்திருக்க வேண்டும். அவ்வாறின்றி, நினைத்த பொருள்களை எல்லாம், அதாவது, கனியாத கனிகள், சுவையற்ற உணவு முதலியவற்றை இறைவனுக்கு அர்ப் பணித்து, பின் அப்பொருள்களைப் பக்குவமாக்கி நாம் உண்ணு தல் எனனும் செயல் சுயநல முடையதாகும். சுயநலம் மட்டுமே உடைய உள்ளம் ஒருமைப்படுவது கடினம்.

துருவன் மார்க்கண்டேயன் முதலியவர்கள் சிறு பிராயத்தி லேயே உள்ளம் ஒருமைப் பட்டதால், இறைவன அவர்கட்குப் பிரத்யட்சமாயினன். அவர்கட்குப் பிறரால் எத்தகைய இடை யூறும் நேரவில்லை. அப்பரின உள்ளம் ஒருமைப் பட்டிருந்த தாலேயே "கற்றூணைக் கட்டிக் கடலிற் பாய்ச்சியபோதும், நற்றுணை செயது" நம்பன் காப்பாற்றினன்.

எந்தொழில் புரியும் போதும், எங்கு நாம் சென்ற போதும், வித்தக இறைவன் தன்னை உள்ளத்தே இருத்துதல் வேண்டும்.

---

கண்இரண்டே யாவர்க்கும் ; கற்றோர்க்கு மூன்றுவிழி
எண்ணும்கண் ஏழாகும் ஈகையர்க்கு என்பாரே.

இது முடிகிற காரியமா? "அண்டமாய், அவனியாகி, அறியொணப் பொருளதாகி" நிற்கும் இறைவன், "தொண்டர்கள் குரு" வாகவும் விளங்குகின்ருன். இத்தகைய இறைவன், தொண்டருள்ளத்தில, என்றென்றும் அமர்ந்து, அவர்க்கு நன்மை புரிகின்றனன. இதனை உணரும்போது, நாமே தொண்டர்களாக இருப்பதை அறிந்து, ஆனந்த மெய்துவோம். உளளம் ஒருமைப் படும்போது, அவ்விடத்தே தீமை தரும் பொருள்களும், உயிர்களும், நடசத்திர, கிரகங்களும், இவை போல் பிறவும், நமக்கு னனமை புரிய அடங்குகினறன. அவைகள் நமக்கா அடங்குகின்றன? இல்லை. நம்முள் வதியும் இறைவனின ஆணைககு அஞ்சி அடங்குகின்றன? தொண்டர்கள் இறைவனின உறைவிட மாதலின், அவ்விடங்களாகிய நம்பால இதர எவையும் தீமை புரிய அணுகாவண்ணம் இறைவன காக்கின்ருன்.

இறைவனை வழிபட்டால் உள்ளம் ஒருமைப்பட்டே தீரும். இறைவனை எவ்வாறு வழிபடுவது? என்னை எந்தப் பொருள்களும், உயிர்களும், கொடியனவும் இன்னல் செய்யாதிருக்க வேண்டும் எனறு வழிபடுவதைவிட, இறைவனே! என இதயத்தில் அமர்வாயாக! என்று பிரார்த்தித்தல் சாலச் சிறந்தது. இதற்கு, ஸ்ரீ அபிராமிபட்டர் நமககுத் திட்டமும், வழியும், முறையும் வகுத்துக கொடுததிருக்கின்ருர். அது பின் வருகிறது.

மனிதரும், தேவரும், மாயா முனிவரும் வந்து சென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே! கொன்றைவார் சடைமேல்,
பனிதரும் திஙகளும், பாம்பும், பகீரதியும் படைத்த
புனிதரும், நீயும், எனபுந்தி எந்நாளும் பொருந்துகவே!

---

ஆநந்தம் தவத்தால் அருள்ஞானம் பெற்றவர்க்கு,
அநந்தமாம் கண்களென, ஆன்றோர் அருளுவரே.

இறைவன் நமக்கு அன்னையும் தந்தையுமாக விளங்குகின்றான். அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பது ஔவையின் வாககு. இருப்பினும், ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்ற வாக்கைச் சொல்லவும் பாட்டி மறந்துவிடவில்லை. எங்கும் வியாபியாக இருக்கும் இறைவன் தொண்டர்களிடத்திலும் இருப்பதால், பெரியோர்களை வணங்க வேண்டும். அவர்தம் வார்த்தைகளை அமுதமாகக் கொள்ளவேண்டும் என்றும் பாட்டி நமக்கு அறுவுறுத்துகிறார். அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வமாக இருபபினும், இறைவனை மறத்தல் கூடாது. அனனை தந்தையர் இல்லாத இடத்தில் நம்மைக் காக்க இறைவனே பொறுப்பேற்கிறான். கொடிய இருள், காடு, சமர்பூமி போன்ற அபாயகர இடஙகளில் இறைவனே நம்மை அன்னை தந்தையராகக் காககினறான். அவன் நம்முள் இருப்பினும் நாமறியோ மாதலால, அவனை நாம் பிரார்த்தித்தே, நம்முள் அவன் அமர்ந்திருப்பதை அறிய வேண்டும்.

'பதியதான சமாதி மனோலயம் வந்து தாராய்' எனறு விண்ணப்பிக்கினறார் அருணகிரி நாதர். மனோலயம் எனில் உள்ளம் ஒருமைப் படுதலேயாம். எவராலும் அசைக்க முடியாத திட நிலைக்கே சமாதி எனறு பொருளாகும். இது அதிக சிரமமென்றாலும், கஷ்டங்களைத் தாஙகும் திறல் ஏற்படும் நிலை உண்டாயின், அப்போதே இறைவன் ஆங்கு குடிகொள் கிறான். ஆதலின கிரகங்களாலோ கொடிய பிராணிகளாலோ ஐம்பூதங்களாலோ பிறவற்றாலோ எத்தகைய தீமைகளும் ஏற்படமாட்டா. அதையேதான் திருஞானசம்பந்தா போன்ற பெரியோர்கள் நமக்கு விளக்கிக் காட்டியுள்ளனர்.

---

உற்றபெருஞ் சுற்றம் உறஙன மனைவியுடன்
பற்றிமிக வாழ்தல், பண்பாகும் கண்டாமே.

# குறிக்கோள்

(கி. வா. ஜகந்நாதன்)

மனிதன் வாழப் பிறந்தவன். அவன் நன்றாக வாழ வேண்டும் என்ற திருவுள்ளத்தினால் அவனுக்கு வேண்டிய பொருள்களையெல்லாம் இறைவன் படைத்து வழங்கி யிருக்கிறான். இந்தப் பிரபஞ்சத்தைத் தந்து அவன் வாழ்வதற்குரிய உணவைத தந்திருக்கிறான். யாராலும் இயற்ற முடியாத நுட்பமான உறுப்புகளை உடைய உடம்பைத் தந்திருக்கிறான். இந்த உடம்பில் செயல் செய்யவும் இன்பம் நுகரவும் இந்திரியங்களை வைத்திருக்கிறான். எல்லாவற்றிற்கும் மேலாக ஆண்டவன மனிதனுக்கு அறிவைக் கொடுத்திருக்கிறான். அந்த அறிவைக் கொண்டு எநத எந்தப் பொருளை எப்படி எப்படிப பயன்படுத்த வேண்டுமோ, அப்படி அப்படிப் பயனபடுத்திக் கொள்ளும்படி இறைவன் நமக்கு உரிமை அளித்திருக்கிறான்.

உடம்பையும், அறிவையும், பிரபஞ்சத்தையும் நாமாகப் படைத்துக் கொள்ள முடியாது. வயது வந்த பிள்ளைக்கு எல்லாப் பொருள்களையும் கொடுத்துத் தனியே அறிவுடன நன்றாக வாழும்படி செய்யும் தநதையைப் போல ஆண்டவன் செய்திருக்கிறான. தன்னை மறவாமல நேர்மையான வழியில வாழ்கிறவனுக்கு அவன் துணை நின்று அருள்புரிகிறான். கண் முன்னாலே தோற்றும் பிரபஞ்சத்தையும் நாம் பெற்ற கருவி கரணங்களையும் கண்டு இவை நம்மால் ஆனவை என்று எண்ண முடியுமா? இவற்றைத் தந்த ஆண்டவனை ஒவ்வொரு கணமும் நினைத்து வாழவேண்டும்.

ஒரு மனிதன் தான் செய்யும் செய்கையில் கண்ணாக இருந்தாலதான அதில் வெற்றி பெறமுடியும். அவனுடைய

---

நக்கு பசு வரைபறறி, நாம் கடககலாம் நதியை,
குககல்வால் பற்றில், குடிகேடு நிச்சயமே.

எண்ணமும் திண்ணியதாக இருந்தால் அது நிறைவேறும். ஒரு காரியத்தைச் செய்யும்போது அதுபற்றிய எண்ணம் உறுதியாக இருக்கவேண்டும். சில செயல்கள் சிறிது காலத்தில் கைகூடும். அது கைகூடும் வரையில் வெற்றியிலே கண்ணாக இருந்தால்தான் காரியம் நிறைவுறும். இப்படி அவ்வப்போது செயலுக்கு ஏற்றபடி எண்ணம் இருக்கும். ஒரு செயல் முடிந்தவுடன் அதன எண்ணமும் முடியும்; வேறு செயலும் எண்ணமும் புதியனவாக வரும்.

ஆனால எந்தச் செயல் செய்தாலும், எந்த எண்ணம் எண்ணினாலும், அடிப்படையான சில எண்ணங்கள் நம்மிடம் இருந்து கொண்டே இருக்கும். ஓடினாலும் உலவினாலும் காலாலே நடக்க வேண்டுமென்பது அடிப்படை. எதைத் தின்றாலும் அது உணவின் வகையாக இருபபது அவசியம். மனிதன் எது செயதாலும் செய்யாவிட்டாலும் மூச்சுவிட வேண்டியது அவசியம். மூச்சு முட்டும்படி அவன் ஏதாவது செய்தால் அவன் இறந்துவிடுவான.

மாணவனாக இருக்கும் ஒருவனுக்கு அநத மாணவப் பருவ முழுவதுக்கும் உரிய குறிக்கோள் ஒன்று உண்டு. அதுதான கல்வி கற்றல். அப்பருவததில் உண்ணல், உறங்கல், விளையாடல் ஆகிய பலவேறு செயல்களை அவன செய்தாலும் கல்வி கற்றலுக்குத தடையாக ஏதும் இருககக் கூடாது. அதுபோல உயிர் வாழும்போது வாழ்நாள் முழுவதற்கும் உரிய தனிக் குறிக்கோள் ஒன்று இருக்க வேண்டும். அப்படி ஒரு குறிக் கோள் இல்லாமையினால் பலர் தங்கள் வாழ்வை வரையறுத்துக் கொள்ள முடியாமல் திண்டாடுகிறார்கள்.

"குறிக்கோள் இலாது கெட்டேன"

என்று அப்பர் சுவாமிகள் சொல்கிறார். எத்தனை ஆற்றலும்

---

ஆசைக்(கு) அடிமையுறின், யாவர்க்கும் தாமடிமை;
ஆசைவென்றார், யாவரையும் அடிப்படுத்திக் கொள்வசரே.

அறிவும் இருந்தாலும் துணிவின்றிக், குறிக்கோளின்றி வாழ்ந்தால் அத்தனையும் வீணாகிவிடும். கிணறு வெட்டி நீர்பெற விரும்பிய ஒருவன் பலபல இடங்களில பாதி பாதியாகக் வெட்டிக்கொண்டே போனால அவனுடைய உழைப்பும் வீணாகும்; பயனும் கிட்டாது. பெரிய அரசை நடததுகிறவர்கள் இப்போது திட்டங்களை வகுத்துக் கொள்கிறார்கள பிறகு அதனை நிறைவேற்ற முயல்கிறார்கள். அரசியலுக்கு மட்டும் உரியதனறு அம்முறை. தனி மனிதனுக்கும் உரியதே. தனக்கு உள்ள ஆற்றலையும் பிறவற்றையும் அறிநதுகான இன்னதை அடையவேண்டும் என்று தெளிவாக ஆராய்ந்து உறுதி செய்துகொண்டு, இடையில் சோராமல் உழைத்தால் வெற்றி பெறுவது திண்ணம். ஆகவே திட்டம் அலலது குறிக்கோள் மிகமிக முக்கியம்.

குறிக்கோள் இல்லாதவன முயறசி வீணாகிவிடும் என்பதற்கு ஒரு கதையை உதாரணமாகச சொல்லலாம்.

துரியோதனனும் அவனுடைய சகோதரர்களும் கவுரவாகள் என்று பெயர் பெறுவார்கள். பாண்டவர்களும் கவுரவர்களும் சேர்நது துரோணரிடம வில்வித்தை பயின்றார்கள். கவுரவர்களைவிடப் பாணடவர்கள அவ்வித்தையில் அதிகத் தேர்ச்சி பெற்றார்கள், எலலோரினும் சிறந்தவனாக நின்றான் அருச்சுனன. அவனுடைய பேரறிவைக் கண்டு துரியோதனனுக்குப பொறாமை உண்டாயிற்று.

ஒருநாள் அவன் துரோணரை நோக்கி, "ஆசிரியப பெருமானே, தாஙகள் அருச்சுனனுக்கு மட்டும் தனியே அருள் செய்து விததை பயிற்றுகிறீர்களோ" எனறு கேட்டான. "அபபடி ஒனறும் இலலையே! எலலோருக்கும் ஒரேமாதிரி தான் சொல்லித் தருகிறேன" என்றார். "அப்படியானால்

---

பசுக்களை, பார்ப்பனியை, பாலகரை, எனறும்
வசவுரைபபார் பாவம், மலைபோல் வளருமரோ.

அவன்மட்டும் இந்த வித்தையில் எல்லோரினும் முற்பட்டு நிற்கிறனே, அதற்கு என்ன காரணம ?'' என்றுகேட்டான்.

" அதற்கு காரணம் என்னிடம் இருக்க நியாயம் இல்லை அவனிடத்தான இருக்கும் "

" அது என்ன "

" அவன் புத்திக் கூர்மை "

" எங்கள் புத்தி கூர்மையைவிட அது எப்படிப் பெரிதாகும் ?'' என்று கேட்டான் துரியோதனன்.

" அதை அவசியம் தெரிந்து கொள்ள வேண்டுமானல் ஒருநாள் காட்டுகிறேன " என்றுர் ஆசிரியர்.

ஒருநாள் தம் மாணுக்கர்களுடன் ஓர் ஆற்றங்கரைக்குச சென்றுர் துரோணர். அங்கே ஒரு மாமரம் இருந்தது. நனறுகக் காய்த்துக் குலுங்கிய அம்மரத்தின் உசசியில் ஒரே ஒரு பழம் பழுத்திருந்தது. துரோணர் துரியோதனனே அழைத்தார் " துரியோதனு, அந்தப பழம் எனக்கு வேண்டும் " என்றுர்.

உடனே அவன அந்த மரத்தின்மேல் ஏறப் புறபபட்டான. ஆசிரியர் புனமுறுவல பூத்து, " என்ன காரியம் செயயத துணிந்தாய்? உனகையில் விலலும் அம்பும் இல்லையா ? அம்பை எய்து அந்தப பழத்தைப் பெறமுடியாது ?'' என்று கேடடார. துரியோதனன் தன் அறியாமையைக கணடு நாணிக கையில் வில்லை யெடுத்து நாண் ஏற்றினன. " அம்பை வைத்துக் குறி பார் " என்றுர் துரேணர்.

அவன அம்பைக் கோர்த்தான. துரோணர், " பழம் தெரிகிறதா?'' என்று தேட்டார்.

" நன்றுகத் தெரிகிறது "

---

பெற்றசெலவம் கொண்டு திருபதியுருப பேதையரும்,
உற்ற திருமறுககும ஊனர்களும், வீணர்களே.

"இன்ன கிளையில் இருக்கின்ற தென்ற அடையாளம் தெரிகிறதா ?"

"தெரிகிறது"

"மரம் தெரிகிறதா?"

"தெரியாமல் என்ன ?"

"என்னைப் பார்க்கிருயா ?"

"உங்களை மறக்க முடியுமா ?"

"சரி அமபை, எய!"

துரியோதனன அம்பை விட்டான். அவனுல் பழத்தை அடிக்க முடியவில்லை. அவனுக்கு நாணம் உண்டாயிற்று. தலையைக் கவிழ்ந்து கொண்டான.

"அருசசுனு !" எனறு அழைததார் ஆசிரியர்.

அவன வில்லையும் அம்பையும் எடுத்துவநது, ஆசிரியரை வணஙகி எழுந்து நாணேற்றி அம்பை வைத்துக் குறிபார்த்தான். துரோணர் கேள்வி கேட்கத தொடஙகினுர்.

"எனனைத் தெரிகிறதா, அருச்சுனு ?"

"தெரியவில்லை, சுவாமி"

"மரம் தெரிகிறதா ?"

"தெரியவில்லை"

"கிளை தெரிகிறதா ?"

"இல்லை,"

துரியோதனன் தலையைத் தூக்கி அருச்சுனனைப் பார்த்தான்.

"பழம் இருக்கும் கொம்பு தெரிகிறதா ?"

"தெரியவில்லை, சுவாமி."

---

மானமிலாப் புன்மனைவி, மானஙகொள் வேசை, யிவர்
ஈனம் உறுவரென, இவ்வுலகம் சொல்லுமரோ.

"பழம் தெரிகிறதா ?"

" இல்லை."

துரியோதனன் இப்போது உள்ளுக்குள்ளே சிரித்துக் கொண்டான். 'பழம் தெரியவில்லையாம்! வானத்தில்தான் அம்பு எய்யப் போகிறானோ?' என்று அவன் எண்ணினான்.

" சரி, அடி " என்று பணித்தார் ஆசிரியர்.

அருச்சுனன் அம்பை விட்டான். அடுத்த கணம் மரத்திலிருந்து கனி விழுந்தது. அதைத் தன் மேலாடையால் வாங்கிக்கொண்டு வந்து ஆசிரியர் திருவடியில் வைத்து இருமுறை வணங்கி எழுந்தான்.

துரோணர் துரியோதனனைப் பார்த்தார். அவன் தலை தாழ்ந்திருநதது.

"துரியோதனா !"

அவன் பேசவில்லை.

" பழம் தெரியவில்லை என்று அருச்சுனன சொன்னபோது இவன் வெற்றி பெறமாட்டான் என்று நினைத்தாய் அல்லவா ?

துரியோதனன் முணு முணுத்தான.

" எபபடி இவன் பழததை அடித்தான் என்பது தெரியவில்லையே ! "

" ஆம் " என்று ஒப்புக்கொண்டான் துரியோதனன்.

" அருச்சுனா, நீ பழத்தைப் பார்க்கவில்லை என்றாயே ! எப்படி அதை அடித்தாய் ?" என்று துரோணர் கேட்டார்.

"எம்பெருமானே, பழத்தைக் குறிவைககவில்லை; காம்பைத்தான் குறிவைத்துப் பார்த்தேன். பழத்தைக் குறிவைதது அடித்திருந்தால் அது சிதறுண்டு போயிருக்கும்."

---

பெறறெடுக்கப் பட்டதுயா பெண்ணே அறிவதுபோல்,
கற்றோர் உயர்வுகளைக், கற்றவர்கள் காண்பாரே.

"அம்பும் வில்லும் இருப்பது மட்டும் போதாது. எதைக் குறிவைக்க வேண்டும் என்று தெரிந்துகொண்டு அம்பை எய்ய வேண்டும் என்பது உனக்குப் புரிகிறதா?" என்று துரோணர் துரியோதனனை நோக்கிக் கேட்டார்.

எதைக் குறிவைத்து அடிக்கவேண்டும் என்பதைத் தெரிந்துகொள்வது மிகமிக அவசியம். அருச்சுனன் செய்தது போல வாழ்க்கையில் நாமும் குறிவைக்கத் தெரிந்துகொள்ள வேண்டும். அருணகிரிநாதர் இன்னதைக் குறியாகக் கொள்ளவேண்டும் என்பதை அநுபூதிபாட்டில் குறிப்பிக்கிறார்.

"அடியைக் குறியாது அறியாமையினால்
முடியக் கெடவோ?"

என்கிறார்.

---

## ஸ்ரீமஹாபாரதம்

(பாரத்வாஜீ அதம்பார் S. ராமஸ்வாமி)

(455-ம் பக்கத் தொடர்ச்சி)

### 2. ஸபா பர்வம்:

காரணமில்லாமல் காரியமில்லை. எக்காரணத்தைக் கொண்டு ஸ்ரீ கிருஷ்ணன் அவதாரம் செய்தானோ அதைப் பூர்த்தி செய்ய வேண்டியது அவன் கடமை. பூபாரத்தை ஒழிக்கவும் தீயோர்களைச் சிக்ஷித்து நல்லோர்களை மேம்பாடுடையவர்களாகச் செய்வதே அவன் நோக்கம். மற்ற அவதாரங்களைப் போலல்லாமல் இந்த எட்டாவது அவதாரம் பூர்ணாவதாரம் என்பர்.

---

நல்லபிள்ளைப் பேறறியா நங்கைபோல், பாடுபட்டுக்
கல்லாதார், கற்றோர் கனமறிதல் ஆவதுவோ?

கிருஷ்ணனை பெரிய ராஜதந்திரியாகவும், பின் வருவன வற்றை முன்கூட்டியே யோசித்து அதற்கு ஆவன செய்பவரா யும், தன்னிடத்தில் யாவற்றையும் ஒப்புவித்துச் சரணகதி என்றடைந்தாரை ஒருக்காலும் ஒருவிதமான இன்னல்களுக் கிலக்காக்காது காப்பவராயும் நாம் இந்த பர்வத்தில் காண் போம்.

மயனுக்கு அர்ஜுனன் செய்த உதவிக்குப் பிரதியுபகார மாகத் தர்மராஜனுக்காக கிருஷ்ணன் ஆணைப்படி அவன் ஒரு அழகான ஸபையைத் தன் சாமார்த்தியத்தினுல் செய்து கொடுத்து மரியாதையும் பெற்றுக் கொண்டான. தவிர பீமனுக்கு ஒரு கதாயுததகதையும் அர்ஜுனனுக்கு ஒரு சங்கையும் வெகுமதியாகக் கொடுக்கின்றுன.

நல்ல நாளில் ஸபாப் பிரவேசம் செய்த தருமபுத்திரர் ஆண்டுவரும் பொழுது, ஒரு நல்ல யாகம் செய்யவேணடு மெனக் கருத, வந்த ஸ்ரீகிருஷ்ணனிடம் அநுமதி கோருகின்றுர். பகைவரிருக்கையில ராஜசூயமோ அல்லது அஸ்வமேதமோ செய்யலாகாது என்று சொலலி, ஜராசநதன முதலானவர்களை ஜயிக்கக கிருஷ்ணனே வேண்டுவன செய்கின்றுன.

பீமார்ஜுனர்கள பிராம்மண வேஷம் பூண்டு மகத தேசம் போய் ஜராசந்தன வீட்டிற்குள பினபுறமாய் நுழைந்து, அவனைக் கைச்சண்டைக் கிழுதது, கிருஷ்ணன சொன்ன குறிபபினுல அவனை இருகூருக்கிக் கால்மாற்றிப போட்டு மாய வைததார்கள.

இந் நற்சேதியைத் தர்மனிடம் தெரிவித்துத் தம்பிகள் நால்வரும் திக்விஜயம் செய்து யாகத்திற்குப் பொருள் தேடக் கிளம்பினா. மிகுநத பொருளதேடி யாவற்றையும் இந்திரப் பிரஸ்தத்தில சேர்த்தனர்.

---

செயயும் செயலாயநது செய்வதன்றி, வேகததால்
செயயின, மனத்தாஙகல் சேருமிது காணீரே.

யாக சாலையின் சம்ரக்ஷணைத்திற்குப் புருஷா மிருகமும், பீமனால் அனுமன் உதவிகொண்டு அழைத்து வரப்பட்டது. ஓட்டத்தில் ஜயிக்க முடியாத புருஷா மிருகத்தைப் பீமன் தந்திரத்தினால் (அநுமன் கொடுத்த மயிர்க்காம்புகளைப் பூமியில் எறிந்து, அவை கோடிலிங்கங்களாக மாறின. அதை ஒவ்வொன்றாக முறைப்படிப் பூஜித்து வருவதற்குள் பீமன் முந்திக் கொண்டே வந்தான்.) ஜயித்ததும் ஸ்ரீ கிருஷ்ணனது அருளாலேயே.

ராஜசூயயாகம் ஆரம்பமாகிறது. தன ரேகையை யுடையவன துர்யோதனன் எனக் கண்ட ஸ்ரீகிருஷ்ணன் அவனையே தனாதிகாரியாக நியமிக்கிறார். யாகம் ஒருவிதக் குறைவுமின்றி விமரிசையாக நடைபெறுவதும், ஸபா மண்டபத்தின் அதிலாவண்யச் சிறப்பும் துரியோதனன் மனதில் பொறாமைத் தீயை வளர்க்கின்றது. இதுவே மாபெரும் யுத்தத்துக்கு வித்துப்போலாகின்றது. ஸபையின் பெருமையை அறியாத துரியோதனன் விழுந்தும், முட்டிக்கொண்டும் பெண்களின் ஏளனத்துக்காளாகின்றான். அதிலும் திரௌபதை கலுக்கென்று சிரித்தது மனத்தை வாட்டுகின்றது. அவமானமாகவும் படுகின்றது.

யாகத்தின் முடிவில் அக்ரபூஜையை கிருஷ்ணனுக்குச் செய்யக் கூடாதென்று வாதாடிய சிசுபாலன் அவரால் சம்ஹரிக்கப்படுகின்றான்.

யாவரும் அவரவர் ஊர் போய்ச் சேர்ந்தவுடன், எஞ்சியிருப்பவரோடு உல்லாசமாக நகையாடிக் கொண்டிருந்த கிருஷ்ணன், கரும்புத்துண்டை நறுக்கி யாவர்க்கும் பகிர்ந்து கொடுத்து வரும் சமயம் தன் கைவிரலை வெட்டிக் கொள்கிறார். ருக்மணிதேவி அரண்மனை பூராவும் விரைவாகத் தேடியும்

---

நாவின் நுனியில் நயமிருந்தால், பூமாதும்,
நாஇனிய நலமேலோரும் நட்பாவர் கண்டாமே.

அிருந்த விரலைச் சுற்றக் கந்தைத் துணி ஒன்றும் கிடைக்காது திரும்புகின்றாள்.

பக்கத்தில் நின்ற திரௌபதியோ, தன் பீதாம்பரத்தின் முந்தானையில் ஒரு சிறு துண்டு கிழித்து கிருஷ்ணனுக்குப் பரிகாரம் செய்கின்றாள். இதுவே அவளுக்குபின் வரும் பிராணுபத்தான மானபங்கத்துக்கு ரக்ஷையாக விளங்குகின்றது.

துரியோதனன ராஜ சபையில் தடுமாறிப் பொறாமை யுற்றுத் தன மாமனுன சகுனியிடம் முறையிடுகினறான். சகுனியும் இதற்கு நல்ல காரணத்தை யோசித்துச் சூதாட் டத்தில் வெகு விருப்பமுள்ள தர்மராஜனைச் சூதாட வரும்படி ஹஸ்தினபுரத்திற் கழைக்கின்றான. க்ஷத்ரிய தர்மம் தவருத தர்மனும் இதற்கிசைகினறான்.

துர்யோதனன் தர்மனுக்கு ராஜசூய யாகத்தில் கிடைத்த வெகுமதிகளை வெகுவாகத் திருதராஷ்டிரனும் சொல்லிப் பொருமைபபடும்போது, திருதராஷ்டிரனும் பாண்டவர்களைப் பகைக்காம லிருக்க எவ்வளவோ நற்புத்திகள் சொல்லு கின்றான். அடிமேல அடி அடித்தால அம்மியும் நகருமே. திருதராஷடிரனும், சகுனி, தன மைந்தன இவர்களின் வார்த் தைக்குச் செவி சாய்தது முறைப்படித் தர்ம ராஜனை அழைக்க முறைப்படி விதுரனிடம் சொல்லி அனுப்பிச, சூதாட்டம் முதலில் விளையாட்டாக ஆரம்பமாகின்றது. பின பணயம் வைக்கப்படுகின்றது. சகுனியின் சாமர்த்தியததினுல் தர்ம ராஜர் ஒவ்வொன்ருகத் தோற்றுக் கொண்டே வருகின்ருர். சூதாட்டததில் தருமபுத்ரன் எல்லாப்பொருள்களையும் தோற்ற பிறகு சகோதரர்களையும், தம்மையும், திரௌபதியையும் தோற்கிறுர். ரஜஸ்வலையான திரௌபதியைத் துசசாஸனன் சபை நடுவே அந்தப் புரத்தினின்று இழுதது வருகினறான்.

---

வன்சொல நுனிநா வழங்குமேல், வான்செல்வம்
புனமைதந்து நீங்கும் ; பொன்றிவிடும் நலவாழவே,

திரௌபதி சபையோரைப் பார்த்து தர்மம் எப்படி என்று கேட்கின்றாள். தம்மைத் தோற்றபிறகு மனைவியைத் தோற்கலாமா? அது தோல்வியாகுமா? என்பதே கேள்வி. தர்மனே பதில் சொல்லட்டும் என்று பெரியோர்களான பீஷ்மரும் கிருபாசாரியும் வாளாவிருக்கின்றனர்.

சபைக்கு இழுத்து வந்து துகிலுரியத் தொடங்குகின்றான் துச்சாஸனன். ஐவரும் தர்மமே கதி - கிருஷ்ணனே அடைக்கலம் என்று குனிந்ததலை நிமிராமல் எல்லா அவமானத்தையும் சகித்துக்கொண்டு இருக்கின்றார்கள். பெண்ணான திரௌபதியோ தன் சாமர்த்தியத்தினால் தன் மானத்தைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும்; பிரத்யக்ஷ தெய்வமான ஐந்து புருஷர்களும் வலியற்று இருக்கின்றார்கள் என்று என்னென்னவோ செய்து பார்க்கிறாள். புடவையின் கடைச் சுற்றுதான் பாக்கி. அதிலுள்ள முடிச்சு அவிழ்ந்தால் மான பங்கம்தான். துச்சாஸனனோ எப்படியும் அவளை அவமானப் படுத்தவேணுமென்றே இருக்கின்றான்.

இந்நிலையில், தன் சாமர்த்தியம் ஒரு க்ஷண நேரம் கூட நில்லாது என்று கண்டறிந்தவள் இரு கைகளையும் உயரத் தூக்கி, “ கோபாலா கோவிந்தா என்றரற்றுகின்றாள்.

துவாரகையில் ருக்மணியோடு இது சமயம் ஸ்ரீகிருஷ்ணன் சொக்கட்டானாடிக் கொண்டிருக்கிறான். பாச்சிகையை உருட்டும்போது பேரிடிபோன்று “ அக்ஷய ” என்ற சப்தம் கிருஷ்ணன் வாயினின்று வருகின்றது. ருக்மணியானவள் தன் நாதன் முகத்தை ஏறிட்டு நோக்க, ஒரு நாளுமில்லாத ருத்ராவேசமும், பெரு மூச்சும், கண்கள் சிவந்திருப்பதையும் கண்டு நடு நடுங்குகின்றாள். கொஞ்ச நேரம் சென்றதும் விட்ட ஆட்டத்தைத் தொடங்கி இனிதே முடிக்கின்றான். ருக்மணி மெதுவாக, அவ்விதக் கோபம் வந்த காரணத்தை

---

பாம்பிற்குப் பல்லளவில், தேளிற் கதன்தலையில்,
தீம்பினர்க்குத் தீயவிடம், தேகமுழு தென்றறியே,

வினவக் கிருஷ்ணன் தக்க சமயததில் சொல்லுகிறேன் என்கின்றான்.

திரௌபதிக்குக் கிருஷ்ணன் அருளால் வஸ்திரம் வளருகின்றது. கையோய்ந்து போகின்றான் துச்சாஸனன். சபையில் நிசப்தம் நிலவுகின்றது. மறுபடியும் திரௌபதி தர்மத்தைப் பீஷ்மரிடம் வினவுகினறாள். உடனே கௌரவ கூட்டம் அவமானமாகப பேசுகினறது. துச்சாஸனன் தன் தொடையைக் காண்பித்து அதில் உட்காரக் கூப்பிடுகின்றான். இதைப் பார்த்துக் கொணடிருந்த பீமன் வீராவேசங் கொண்டு கொடிய சபதத்தைச் செய்கினறான. துச்சாஸனன் தொடையை முறித்து ரக்தத்தை அவிழ்த்து விடப்பட்ட திரௌபதியின் கூநதலில் வாரி முடிவதெனறும், அந்த ரக்த பானத்தைச செய்த பின்னரே தான தண்ணீர் குடிபபதென்றும் பிரதிக்ஞை செய்கின்றான். உத்பாதங்கள பல நிகழ்கினறன. பகலில் நக்ஷத்திரம் காணுவதும் எரிகொள்ளிகள் ஆகாசத்தினினறு விழுவதும் கண்டு, திருதராஷ்டிரன் பயப்படுகினறான திரௌபதி கௌரவர்களைச் சபித்த பொழுது பூமாரி பெய்கின்றது.

தர்மபுத்திரர் இந்திரப பிரஸ்தம் செல்கின்றார். மறுபடியும் சூதாட அழைக்கபபடுகின்றார். ஜயித்தால் தோற்றதெல்லாம் திரும்பப பெறுவதெனறும், மறுபடியும் தோற்றால் பனிரெண்டு வருஷம் வனவாசமும் ஒரு வருஷம் அஞ்ஞாத வாசமும் என்று தீர்மானிததுத் தோறறே விடுகின்றார்கள். அதனால் வனவாசம் மேற்கொண்டு காட்டிறகுப போகும் போது, பாண்டவர்கள் கௌரவர்களை வதஞ் செய்வதாகப் பிரதிக்ஞை செயது கொள்கிறாகள். தாயாரான குந்திதேவியை விதுரரிடம் ஒபபுவித்துப் போகின்றார்கள். [தொடரும்]

---

அரவம் மணிமந்த்ரத் தடங்கும்; அடங்கா
நரிக்குணத்து மாக்களும, கானிலததில் உளளனரே.

தேவிதர்ச்சிகள் 35

# சோதனைச் சுழல்

(ரஸபதி)

பிரமன் பிள்ளை தருமன். அத் தர்மனுக்கு, நரன் என்று ஒரு தநயர்; நாரணர் என்று ஒரு மைந்தர். மக்கள் இருவரும், கற்பன கற்றனர். முன்னைய புண்ணியம் முனவந்து உதவ, கற்ற கலைகளில், ககன வடிவியின் அருளையே கண்டனர். 'அவளால் வந்த ஆக்கம் இவ் வாழ்க்கை எல்லாம்' ,என்று அறிந்தனர்.

பேருன தேவியின் அருளைப் பெறவேண்டும். இதுவே வாழக்கையின் குறிக்கோள. ஆம் ஆம் என்றது அறிவு. ஓம் ஓம் என்றது உணர்வு.

உறவினரை மறந்தனர். புனித தேவி துணை யென்று, புறப்பட்டனர். இமயத்தை எய்தினர். கங்கைக் கரையைக் கண்டனர். பதரிகாச்சிரமத்தில் தங்கினர். உமாதேவியின் திருவுருவை, உள்ளம் கொண்டு உணர்ந்தனர். உணர வுணர, உள்ளம் பாகாய் உருகியது. கனிவிக்கும் பக்தி வெள்ளம் கரை புரள, மகிழ்ந்து அதனமேல் மிதந்தனர்.

அம்சத்தால் விஷ்ணுவான அவ்விருவரும், பலகாலம் வரை, இந்த அரும்பெரும் தவத்தில் ஆழ்ந்தனர். பெருகிச் சித்திகள் பிறந்தன. புனிதமான அவைகளையும், பொருட்படுத்திலர். தத் பத சொருபததில், அவர்கள் உணர்வு தாவியது.

பெருமழை சில காலம்வரை பெய்தது. கோர நாடகம் நடத்தி, காற்று கொக்கரிததது சிலசமயம், எழுந்த நெருப்பு, ஒருசமயம் இருந்த வனத்தை எரித்தது. பாம்புக் கூட்டம், அண்மையில வந்து படமெடுதது ஆடின. நாற்புறமும் கூடி நாய்கள் குரைததன. உருத்துப் புலிகள் உறுமின. கடுங் கோபச சிஙகஙகள் கர்ஜித்தன. நல்ல செயல்கட்கு நாலாயிரம் தடையா! ஆ, என்ன உலகம் இது?

---

அவ்விய நெஞ்சத்(து) அறிவிலாத் தீயவரை,
செவ்விபரா மாற்றும் செயலாளர் யாரேயோ ?

மாபெருந் தேவியின் வாக்பீஜ, காமபீஜ, மாயா பீஜ மந்திரங்களை உருவேற்றுவதிலேயே கருத்தைப் பதித்த நர நாரணர்கள், சிறிதும் பாதிக்கப் பட்டிலர். இது இயற்கை விளை வித்த இடையூறு. அரிய இச்செய்தி, அன்பர்கட்கு நல்லதொரு அறிவிப்பு.

* * * * *

மன்மதனுக்கு மகுடம் சூட்டும் வசந்த காலம் வந்தது. சந்தன மணத்தொடு, புனித தென்றல் புறப்பட்டது. மரம் செடி கொடிகளில், எங்கும் தளிர்கள் எழுந்தன. பலவகை மலர்கள், பெரிதும் மணத்தைப் பரப்பின. வண்டுகளின் ரீங்காரம் வளர்ந்தன. எங்கும் குயில்கள் இசையை எழுப்பின.

கீழ்த்திசை வானம் மின்னியது. என்ன அதிசயம்! ஏராளமான மாதர்கள், ஒளி யுடம்பினராய், நர நாரணர்தம் எதிரில் வந்து இறங்கினர்.

நாணம் கொண்டார்போல் நடித்தனர். பல கருத்தில், மோகன கீதம் பாடினர். அபிநய லாவகத்துடன், பரதம் ஆடினர். இந்த அதிசயம் கண்ட அருந்தவர் இருவரும் வியந்தனர்.

நரா! பின்பனிப் பருவம் நிறைவு பெறுமுன், வசந்தம் எப்படி வந்தது? தியானத்திற்கு இப்பருவம் தீங்கு விளைவிக்குமே! அங்கமான தவம் பங்கம் ஆகுமே! எச்சரிக்கையாக இரு! என்றார் நாரணர்.

அரம்பை, மேனகை, திலோத்தமை முதலிய அளவிலா மாதர்கள், ஆன சாகஸம் யாவும் காட்டினர்.

முனிவர் இருவரும், அவர்கள் நோக்கத்தை, உள்ளக் கண்கொண்டு உணர்ந்தனர். அவர்கட்கு, தாம் யார் என்று அறிவிக்க நினைத்தனர்.

அம் மாதர்கள் அறியுமாறு, தன் தொடையை நாரணர் தட்டினார். சிறக்க அவர் பெற்றிருக்கும் சித்தியால், ஊர்வசி தொடையிலிருந்து உதித்தாள் (ஊரு - தொடை.)

அழகின் பெருக்கோ! அமுதத் திரட்சியோ! என்ன அதிசயமான ஏந்திழை! என்று, நங்கையர் யாவரும், ஊர்வசியைக்

---

கந்தம் பலகலந்து கம்பீரம் செய்தாலும்,
கந்தமுள பூண்டு கப்புமணம் போகாதே.

கண்டு நாணினர். அரும்பெரும் தவத்தரை அணுக அஞ்சினர். பிறகு ஒரு முடிவிற்கு வந்தனர்.

பாலும் பழமும் தட்டில் ஏந்தினர். எதிரில் வைத்தனர் இறைஞ்சி நின்றனர்.

ஸ்வாமின்! இந்திரன் எங்கள் எஜமானன். சோதியுங்கள் என்று, அவன் ஏவ வருகிற ஏவலர் நாங்கள். எங்களால் களங்கம் எய்தினர் பலர்.

எங்கள்மேல; கோபம் வேண்டாம்! சாபம் கொடுக்கவும் வேணடாம். பொறி புலன்களைக கட்டுப் படுத்திய நும் பொன்னுர் திருவடிகளைப் போற்றுகிறோம்.

மயக்க வந்தோம். உங்கள் தவப் பொலிவு, எங்களை மயக்கி யிருக்கிறது. சிறந்தது, இங்கு செய்யும் சேவை. இதற்கு இடம் அளிததால போதும். அதன்மூலம், எங்கள் பிறவி யீடேறும் என்று, கண்ணீர் பெருக்கிக் கதறினர் நர நாரணர், அது கேட்டு நகைத்தனர்.

ஏவியவன் இருககு, அம்பை நொந்து ஆவதீ யாது எங்கட்கு எனறு உங்களை அனுபபிய இந்திரனுக்கு, எங்கள் பரிசு இது என்று, கொணடுபோய் இந்த ஊர்வசியைக கொடுத்து விடுங்கள!

ஆண்கள என்ற பெயர்க்கு, ஆண்மையை ஆளபவர் எனபது பொருளாகும் பாழும் இச்சைக்குப் பலியானபின அவர்கள், தஙகளை ஆடவர் எனறு எண்ணுவதே பிழை. பொறி புல சேட்டைகளைப பொன்றச செய்தோம்; அகில லோக மாதா, வழிகாட்டி எஙகளை வாழச செய்கிறள. இந்திரன ஏவலும், மயக்க வநது நீஙகள் மயஙகலும, இனி நிகழும் எதுவும், அவளுடைய அருளாடல்களுள ஒரு சில. இதனை அறிமின்கள் எனறனா. அவ்வளவுதான.

ஓம்' ஓம் என்றனர். அநத அளவில், இருவரும உள்முகம் ஆயினர். உம்பரால் வந்த இடையூறு, அந்த அளவில் ஒழிநதது.

வந்த காரியம் பலிக்கவிலலை. நினைத்த எண்ணமும் நிறைவேறவில்லை மாதாகள், எண்ணி மனம் கணஙினர்

---

கைககும் மருந்தும, கடுமொழியும தாஙகலாம,
தைக்கும்முள போல்வர்செயல, நாம்தாங்கல் ஆவதுவோ?

பெருவுண்டிற்கு இனி போவது ஏன் ? நாரணி ! புவன காரணி! ஆரிய ஆரணி! குவிந்த மனம் குலைந்ததே! கா அம்பா! எம்மைக் கா ! கா !! என்று, உமாதேவியை எண்ணி ஓலம் இட்டனர்.

பசுமை ஒளி எங்கும் படர்ந்தது. ஆஹா! அபய வரத கரம்காட்டி, அதன் நடுவில் நின்றாள் அம்பிகை.

நர நாரணர்கள், உலகிற்கு வழிகாட்ட உதித்தவர்கள். அவர்கள் முகமாக, ஆகவேண்டிய செயலகள் ஆயிரம் ஆயிரம். சால்புடைய அவர்களைக் கண்டு, சபலம் அடையாதீர்கள் ! அவர்களை ஆவலித்தீகள ! எண்ணம நிறைவேறவிலலை என்று ஏங்குகினறீகள் ! அது கருதி, எம்மை ஏத்திய பயனை யும் எய்துவீகள் ! இருபத்தெட்டாம் சதுர்யுகம். அதில் வரும் ஒரு துவாபரம். அநத யுகத்தில, நர நாரணா கிருஷ்ணார்ச் சுனர்களாய் வருவர். நீங்கள் நினைத்தவை, அந்தக் காலத்தில் நிறைவேறும். அதுவரை, செய்யவேணடிய சுவர்க்க சேவை யைச செயயுஙகள்! புரிகிறதா என்றாள் புனித தேவி. பளிச் சிட்டது வானம். உருக்கரநதார் உமாதேவியார்.

* * * * * * *

இரணியன் இறந்தான். அதன்பின ஆதி மாதவர் அறி விபபினபடி, அழகிய பாதலத்தைப் பிரகலாதன ஆண்டான்.

பிருகு முனிவர் புதலவர் சவனர். அவர், சிறந்தது என நினைவால், தீர்தத யாத்திரை செயதுகொண்டு இருந்தார். ஒருநாள், ரேவா நதியில் நீராடினார். அனுட்டித்துக கொண்டு இருநதார் பெரிய பாம்பு ஒனறு, அவரைப பற்றியது. மினனல் வேகததில், பிலத்துவார வழியாக, சிறந்த பாதல உலகில் செனறது.

அஞுசினர் முனிவர். மாதவி ! கேசவி ! மாயா ! ஆயே ! ஐயோ ! அம்பா ! என று அலறினர்.

அவ்வோசையைக் கேட்ட அரவு, அவரை விட்டுவிட்டு விரைநது மறைந்தது. அஙகிருந்த நாகாகள, அவா குரல் கேட்டு விரைந்தனர். அருநதவர் எனறு அறிநதனா. கனிநத அனபு காட்டினர். அவரை, தங்கள் அரசனிடம் அழைத்துச் சென்றனர்.

---

கமலமுகம், இனபமொழி, வஞ்சமனம் கணட
திமிலர் உறவால், தீங்குவரும் திண்ணமிதே.

கண்டதும் பிரகலாதன, சிரமேல் கரம் கூப்பினன். புது பக்தியுடன் அவரை வரவேற்று, பதினாறு உபசாரமும் பண்ணினன.

பிரகலாதரே! எதுவும் தேவ தேவியின் திருவிளையாடல். அது குறித்த நூல்களைக் கற்றிருக்கிறேன. மாபெரும் மதியை, விதி திரையிட்டு மறைக்கிறது. தீர்த்த யாத்திரை காலத்தில், பாம்பு ஒன்று, என்னைப் பாதலத்திறகு இழுத்தது. அது, விஷ்ணு பக்தனான உன்னை, சேவிக்கும் வினைவு செய்தது. அதை ஆரம்பத்தில் அறிந்திலன. இபபோது உணர்கிறேன் என்றார் சிவனார்.

அபபடியா செய்தி! ஸ்வாமீ! நிலவுலகில், எத்தனை புனித நதிகள் இருக்கின்றன?

பிரகலாதரே! நைமிசாரண்யத்தில், சக்கரம், புஷ்கரம் என இரண்டு தீர்த்தங்கள் இருக்கின்றன. அதுபோல், நிலவுலகில் அளவிலாதன உள.

இதயம் தூய்மையாக இருபபவர்கள், எடுத்து அடி வைதத இடமெலலாம புனித நிலம். அவர்கள் நீராடிய பொய்கைகள் யாவும் தீர்த்தஙகள. அமர்நது தியானித்த இடம் முழுதும் ஆலயங்கள.

வாககு மனம் கெட்டு, சீரழிநத வழியில் செல்பவர்கட்கு, புனித நதியின புணணியம் புலனாவது இலலை. கரை ஓரத்தி லேயே குடியிருநதும், அவைகளின அருமைகளை அசட்டை செய்பவர் அளவிலர். உளளத்தால் தூயமை யுடையவாககே, சிறந்த தீர்த்த புண்ணியம் சிததிக்கும்.

ம் ம்...பிரகலாதரே! நான இங்குவந்து நாள் பல ஆயின. வருகிறேன. அரிய நிலவுலகிற்கு எனனை அனுபபிவிடும் என்றார் சிவனார்.

அதன்படியே அவரைத் தனது ஆட்கள் மூலம், வழிமுறைப்படி அனுபபி வைத்தான.

அதனபின பிரகலாதன், விமல அத்தீர்த்தங்களில் மூழுக விரும்பினன. பெரும்படை தொடரப் புறப்பட்டான். நில

---

தன்மையால பல்லோர் தாழ்கினறார்; அன்றி,
இனததினால தாழ்வார், எக்நாளும் இல்லையரோ.

ஷல்கிற்கு வந்தான். அற்புத நதிகளில் ஆடினான். அருமை யானது சரஸ்வதி நதி முதன்மைவிதிப்படி அதில் மூழ்கினன். அநுஷ்டானம் செய்தபின், சிறந்த தானம் பல செய்தான்

அண்மையில் ஒரு பெரிய ஆலமரம். அதன் கீழே, ஒன்றில், இரு விலகள்; தூணிகள் இரண்டு தொங்கு கின்றன.

என்ன அதிசயம! புனித நதி இது. அக்கரையில் பல ஆஸ்ரமங்கள். இங்கு இவைகள் இருக்கக் காரணம் என்? இப்படிப் பிரகலாதன வாய் தானே பேசியது.

அவ்வழி வந்த ஒருவன், அநத வில்பெயர் சார்ங்கம் அடுத்து இருப்பதன் பெயர் ஆஜவகம். அநத இரண்டும், உயர்ந்த அம முனிவர்களது உடைமை என்று, கம்பீர நர நாரணரைச சுட்டிக் காட்டினன.

என்ன இது! மானதோல. நெடுஞ்சடை. தியான நிலை. இவர்கள் முறறும் துறந்த முனிவர்கள். இவர்கட்கு ஏன் இவை? என்று மனம் எண்ணியது. அவர்கள் இருக்கும் இடத்தை அணுகினன்.

தவ சீலர்களே! வீர கோலமும் உங்கட்கு வேண்டுமோ? தங்கமான தவத்திற்கு தனுசும் ஒரு அங்கமோ? சிரம் சடா தாரணம். தோளில் அம்புறாத் தூணி. அத்தகைய தவத்தரை இதுவரை அறிந்திலேன். அதனுல்தான கேட்கிறேன என்ருன்.

அசுரேந்திரா! உனக்கு ஏன் இந்த விசாரணை? உலக சுகத்தை உகந்தவன் நீ! பிரம ரிஷிகளின் தர்ம அதருமங்களைக் குறித்துப் பேச உரிமை யில்லாதவன! போ! இங்கிருநது போய் விடு! என்ருன நரன.

என்ன அகங்காரம! நீங்கள் போ என்ருல், நான போய் விடுவதா? க்ஷத்ரிய தர்மத்தை, நீங்கள் ஏற்றல் தகுதி யல்லவே! இவ்வளவுதானே நான கேட்டேன! படபடக்கும் உங்கள் வில வீரத்தை, நான் பரிசோதிக்க நினைக்கிறேன! இப்போது என்ன சொலவீர்கள் என்ருன பிரகலாதன.

---

மண்கலத்தில் கங்கை நீர் மனனில, மதிப்பிலபோல்,
என அறிவு, ஆசாரம் இல்லாரும் மானிடரோ.

அசுர அதமா! பரமன் உன்னைப் பாதலம் அனுப்பினன், அவன் அனுமதி யின்றி, நிலவுலகிற்கு நீ வந்தது முதல் பிழை. தீர்த்த யாத்திரைக்கு வந்தவன், படைகளொடு வந்தது அடுத்த பிழை. மற்று, வந்த செயல் ஒனறிலேயே மனத்தை வைக்காமல், பிற விஷயங்களில் உளத்தைச் செலுத்துவது பெரும் பிழை. அதனொடு வம்பு வாதம்! இவைகளை யாம் எண்ணிலம்; அவரவர் வினைவழி, அவரவர் மனநிலை எனபது எங்கள் இயல். பலப பரீட்சை செய்யவா பார்க்கிறாய்? வா! அதையும் சோதிதது அறிநதுகொள் எனறுன நரன.

இபபுறத்தில இருவர். அபபுறத்தில் பிரகலாதனும், அவனுடைய பெரும் படைகளும். எனனவேதனை? வரவர போர், உககிரங் கொண்டு வளர்ந்தது.

மண்முதல் விண்வரை அம்புமயம். குனத்தொனி களால், அகில உலகும் அதிர்ந்தன. பல காலமாகப் பயஙகர தேவதை, இப்படியே அகோர தாண்டவம் ஆடியது. விளை யாட்டாக ஆரம்பித்த செய்தி, எவ்வளவு விபரீதத்தை விளை விதது விட்டது.

திடீரெனறு திருமால், கருடனமேல் பிரகலாதனுக்கு மட்டும் காடசி தந்தனா.

கண்டான். கைகுவித்தான. பக்தவற்சலா! ஜகந்நாதா! பெரிய திருவடியை, சிறிய திருவடியை ஆண்டு கொண்ட செலவமே! உன் அனபனுன அடியேன், ஏன் இந்த இரு முனிவர்களை இனனும் வெல்ல இயலவில்லை? எனறு அலறினன்.

பிரஹ்லாதா! உன்னை வெல்ல வல்லவர், எந்த உலகிலும் இல்லை. இது உண்மை. இம் முனிவர் இருவரும், பரா சத்தியின் பகதர்கள. பேறுதரும் தேவியின் அருளைப பெற்ற வர்கள். எனது அம்சமான இவர்கள, அடுத்து வரும் திரேத யுகததில் இராமலக்ஷமணராய, துவாபரத்தில் கிருஷ்ணார்ச்சுனர் களாய் அவதரித்து, அக்கிரம பூபாரத்தை அழிக்க இருப் பவர்கள்.

அதற்கான ஆகக சக்தியை அதிகம் பெற, 'உலக வடிவியான உமாதேவியை, அவர்களை அறியாமலேயே

குணத்தின நலனுணராக் கொடியோர் இடத்தில்,
குணநலத்தர் சேரார்; குறிப்புணர்க இவ்வுலகே!

அவர்கள் உணர்வு, வந்தித்துச் சிந்தித்து வணங்கிக் கொண்டு இருக்கிறது.

• நீடித்த போரை நிறுத்து! இப்போதே புறப்படு! பாதலத்தில் எம்மை வழிபட்டு, எப்போதும் போல இரு! என்று அருளினர் திருவுருக் கரந்தார் திருமகள் கேள்வர்.

நர நாரணர்களைப் புரிந்து கொள்ளாமல், பெருந்தவறு செய்தேன் என்று வருந்திய பிரகலாதன, மானசிகமாக அவர்களை வணங்கி, ஒளிந்து படைகளுடன் ஓடினன. அரிய பாதலத்தை அடைந்தான். அன்பாட்சி நடத்தி ஆனந்தமாக இருந்தான.

நர நாரணர்கள், ஓடியவனைத் தொடர்ந்திலர். வில்லை மரத்தில தொங்க விட்டனர். பரசிவையின பீஜாட்சரத்தில் மனத்தைப் பதித்தனர்.

• உயர்ந்த அவர்கள் உணர்வு, உலகம் முழுதும் ஊடுருவி, அமைதியை உயிர்கட்கு அளித்தது.

பக்த பிரகலாதன நர நாரணரைப் பகைத்த செய்தி, ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாமை. இது இன்ப நண்பர்களால் வரும் இடையூறு என்று, உணர்ந்து கொள்கிறது உலகம்.

• அம்பிகை பக்தர்கட்கு, எந்த இடையூறும் எளிதில் தீரும்; அதன்பின் பெருகிய இன்பம் பிறக்கும் என்பதை, உயர்ந்த இவ் வரலாறு கொண்டும் உணரலாம் அல்லவா!

வாழ்க தேவிதாஸர்கள்!

ஓம்

---

# PLANETARY DISPLACEMENTS

We are now posited on the 4th of February 1962, and the world is facing a great excitement as to what may befall the world and where, on account of the conjunction of eight planets in the house of Makaram in the language of astrologers, who are however quite divided in their opinions. A sense of fear of the happening of possible cataclysms would appear to have much disturbed the out-

look of good many people, and little is gained by the needless sharp vituperations indulged in by some who know very little about the background of astrology. It may be well, however, to keep in mind one thing The planets are the servants of God created by Him, and they are a loyal band. The Ominipresent Lord of mercy is there even in-side the planets. Humanity, the children of God, need have no fear, for the universal protector is all prem and kindness for His devotees. Well have His Bakthas staged a great and unprecedented demonstration of their Bakthi, almost pervading the entire atmosphere of the land with the prayers of the devotees for the Lord's protection.

The great result which has been achieved so far is one which could not have been achieved otherwise normally—the spread of Bakthi in almost all classes of people to a degree unparallelled over several decades and may the Lord grant that the people as a whole be blessed to receive His blessings in the golden hands of their love to God and trust in Him. Love of Humanity is the central test of God-love. Deted 4-2-1962.

Since the above note was sent, the course of events has completely justified the view that things are best left in the dispensation of the Lord's mercy which is never-failing, especially in matters beyond human ken, or power. *Thiruppugazh Moni.*

கோள் சொல்லுவேன், வசை சொல்லுவேன்,
குறைசொல்லுவேன், முறை சொல்லுவேன்
கீள் சொல்லுவேன், மிகை சொல்லுவேன்,
கிலி சொல்லுவேன், வலி சொல்லுவேன்,
சூள் சொல்லுவேன் அயன் ஊழிநாள்
சொலவேண்டினும், சிறிதுன்னை, ஓர்
நாள் சொல்லல் என்று அறிகின்றிலேன்
நாராயணா ! நாராயணா !!

No 1506
ASOKA

# Coffee
## Ours for Quality

RAW ROAST OR GROUND

**GANESH & CO., (MADRAS) LTD. MADRAS**

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்.

**சுவர்ண மாளிகை**

**A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.**

தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்.

124, தெற்காவணி மூலவீதி :: மதுரை

Tel: "FAITH" Estd: 1924. Phone: 113.




**குடை மார்க் பினாயில்**

(சிறந்த கிருமி நாசினி)

தயாரிப்பாளர்:

**ஸ்பிரிட் வேர் ஹவுஸ்**

49, சைடன் ஹாம் ரோடு
சென்னை-3. டெலிபோன்: 33982

விநியோகஸ்தர்கள்:

**கார் & கம்பெனி**

1/6, செகின் லேன் பீச்.
சென்னை-1. டெலிபோன்: 22058


**அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்:**

பங்குனி மாதத்துடன் உங்கள் வருட சந்தா முடிவடைகிறபடியால், தயை கூர்ந்து சுபகிருது வருஷ சந்தாத் தொகையை அனுப்பும்படி ஞாபகப் படுத்துகிறோம். வி. பி. யில் அனுப்ப இயலவில்லை.

அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1.


Printed by V. Thirunavukarasu at the Rathnam Press (Branch)
65, Tirupalli Street, Madras-1.
Edited & Published by S. Muthuswami, 54, Bunder Street, Madras-1.